உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-வரு புரட்டாசி-மீ 29-உ (14—10—1934) | மலர் 8.

## மதங்களின் கேடு.

(தோழர் கடம்பங்குளம் ப. நாராயணன் அவர்கள்.)

மெட்டு "சொல்ல வல்லாயோ—கிளியே"

பல்லவி

மதங்கள் வேண்டாதே—தோழா
மதங்களை வேண்டாதே

அனுபல்லவி

நிதமும் மதத்தின் நிழலில் இருந்து
நீசர் ஆகிநாம் நாசமாய்ப் போயினோம் (மத)

சரணங்கள்

1. ஒற்றுமைக் குப்பதிலாய்ப்—பல
* ஊறு மலிந்தனவே—நாம்
இற்றைநாள் வரைக்கும் இந்த மதங்களால்
எய்திய பயனை இன்னதென் றியம்பீர். (மத)

2. சண்டை மலிந்தனவே—பல
சாதி மலிந்தனவே—இன்றும்
மண்டை யுடைகிறார் மானம் அழிகிறார்
மக்கள் மாக்களாய் மாண்டு முடிகிறார் (மத)

3. தக்க சாதியென்றும்—இது
தாழ்ந்த சாதியென்றும்—முன்னம்
மக்களைப் பிரித்து மடையர் ஆக்கின
மதத்தை இன்றுநாம் மனிதர் கொள்வதோ (மத)

4. கூழுக் கில்லாதே—பாலர்
கூகூ என்றலறக்—கல்லில்
பாலும் பழங்களும் பஞ்சா மிர்தமும்
பாழாகக் கொட்டும் பழிப்புக்கிடமான (மத)

5. கோடிக் கணக்கானோர்—கட்டக்
கோவணம் இன்றியைக்—கல்லுக்(கு)
ஆடை யணிகள் அணிந்தழ குபார்க்கும்
மூட மதியைமேன் மேலும் வளர்த்திட்ட (மத)

6. கால்வயிற் றுக்கின்றியே—மக்கள்
கஷ்டப் பட்டெஞ்சியே—மாளும்
கோலத்தைக் கண்டும்வீண் கோயில்களைக்கட்டிக்
கோடிகோ டிபொருள் பாழ்படச் செய்திட்ட (மத)

7. கஞ்சிக் கில்லாதோர்—"நமது
கருமம்" என்றெண்ணப்—பெண்கள்
பஞ்சையர் ஆகியே பட்டிமா டாகிடப்
பணத்திமி ராலே பரப்பிடும் பாழும் (மத)

8. கடவுள் என்று சொல்லும்—அதைக்
கல்லில் செம்பிலென்னும்—இது
மடமையால் வந்ததாய் மக்கள் உணர்ந்திட
மக்கள் சமதர்ம வாழ்க்கை துவங்கிட (மத)

* ஊறு = தீமை.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள
## இதா பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 | நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 | | |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு
ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் **M. A.**

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும்.
விலை அணு 4.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
ஈரோடு.



### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

# "மரணத்திற்குப்பின் மனிதர் நிலை"

## சந்தேகத்தெளிவு.

(தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

கரிவலம் வந்த நல்லூர்வாசி ஒருவர், ஒரு பழைய "தமிழரசு" பத்திரிகை யொன்றை நமக்கு அனுப்பி, அதில் வரைந்துள்ள "மரணத்திற்குப்பின் மனிதர் நிலை" என்ற கட்டுரை, தனக்குச் சஞ்சலத்தை உண்டாக்குவதாகவும், அந்தச் சஞ்சலத்தைப் "பகுத்தறிவு" வாயிலாகப் போக்குமாறு கேட்டுக் கொள்கின்றார். ஆனால், ஒன்று நமது நல்லூர் வாசிக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தியாதி கதைகள், ஆதி மனிதன் உலகில் பேசத் தெரிந்து கொண்டது முதல் வழங்கி வந்திருக்கின்றன. நீண்டர்தாலர் (Neander thalers) என்ற ஓர் ஆதிமனிதர், ("மனித உற்பவத்தில்" படிக்கலாம்.) தங்களுக்குள் இறந்தவர்களை அடக்கம் செய்து வந்தார்கள். அவர்கள் கல்லறைகளில், இறந்தவர்களுக்கு உணவு, ஆயுதம், முதலியவகளை வைத்து வந்தார்கள். இதிலிருந்து, அந்தக் காலத்திலேயே, அந்த ஆதிமனிதர், தாங்கள் இறந்தால், திரும்ப அவர்களுடைய ஆன்மா, அல்லது தாஸ் குப்தாவின் "ஆவி" உலகில் உலாவுமென்று எண்ணி வந்தார்களென்று, யூகிக்கலாம். இதே எண்ணம், இன்றைக்கும் உலக மக்கள் பெரும்பான்மையோருக்குள்ளும் இருந்து வருகிறது. "தமிழரசில்" எழுதியுள்ள கட்டுரை அதிகாரி தாஸ் குப்தாமாத்திரமல்ல, மற்ற அநந்த கோடி மக்கள், ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள், பிரபல லாயர்கள், சில பிரபல விஞ்ஞானிகள், கல்லூரி பண்டிதர்கள், பெரிய மடாதிபதிகள், மகாத்மாக்கள், மௌலானாக்கள் முதலியோர் இந்தக்கதைகளைப் போன்ற மருளில் நம்பிக்கை வைத்துள்ளார்கள். நமது மகாத்மாகாந்தியும், தனக்குக்கடவுள் இதைச்சொன்னார், அதைச் சொன்னார் என்று கைகூசாமல் எழுதுகின்றார்! இவரைப்போன்ற உண்மை உரைக்கும் மகாத்மா உலகில் இல்லை என்கிறார்கள். அரசியல் துறையிலும், வாழ்க்கையிலும் "உண்மை" உரைக்க வேண்டுமென்று காங்கிரசிலும் திட்டமிட்டு வருகின்றவர், தனது காதில் தனது கடவுள் ஓதினாரென்றால், அதை நம்பமாட்டேன் என்று கூறும் காங்கிரஸ் வாதி யார் இருக்கின்றார்கள்? 2000வருஷங்களுக்கு முந்தி, மோஸேயுக்கு (Moses) அவர் கடவுள் தீப்பற்றி எரியும் புதரிலிருந்து கொண்டு (The burning bush) பத்துக் கட்டளையை தனக்கு ஓதினாரென்று பைபிளில் எழுதியுள்ளதை கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் நம்பி வருகின்றனர். இன்றையதினம், மகாத்மா காந்தியும், கடவுள் தனக்குச் சொன்னார் என்று சொல்வதற்கும், 2000 வருஷத்திற்கு முந்தி மோஸே (Moses) சொன்னதற்கும் என்னவித்தியாசம்? இதை நம்பினால், அதை ஏன் நம்பலாகாது? எல்லாம் மக்கள் நம்பிக்கையைப்பொருத்தது. நமது தமிழ் நாட்டில், கற்களில் கடவுள் பிரசன்னமாகின்றார் என்று நம்பி, கோயில்களுக்குச் செல்கின்ற அநந்த மக்களும், தாங்கள் நம்புவது உண்மை என்றே கருதிக் கற்களுக்கு வந்தனை வழிபாடு செய்கின்றனர். எந்த நம்பிக்கைக்கு அணை போட்டுப்பார்ப்பது? ஆதி மனிதன் எண்ணி வந்தவாறு, 50000 வருஷங்களுக்குப்பின் வந்த அவர்களுடைய சந்ததியாராகிய நாமும், மனிதன் இறந்த பிறகு, அவனது ஆவி உலகில் உலாவுகின்றது என்று எண்ணுகின்றோம்!! பிரபல விஞ்ஞானியாகிய Sir. Oliver Lodge அவர்களும், தனதுகுமாரன் Reymond என்றவர், இறந்த பிறகு அவருடன் சம்பாஷிப்பதாக எழுதுகின்றார்!!! படிக்கத்தெரியாத எங்கள் தாயும், எங்களுடைய தகப்பனார் உயிருள்ள போது பிடித்த சுருட்டுகளைப்போன்ற சுருட்டுகளை அவர் இறந்த கூடத்தில்வைத்து, 20 வருஷ காலம் படைத்து வந்தார்கள்!!! ஆனால், தகப்பனார் பிடித்துச் சுருட்டைக் கரியாக்கியதை நாங்கள் பார்த்து வந்தோம். அவர் இறந்த பிறகு வைத்துப்படைத்த சுருட்டுகள் எங்கள் தாயைத் தவிர எந்த ஆவியும் கரியாக்கியதைப்பார்க்க வில்லை!!!! எங்கள் தாயார் எண்ணமும், விஞ்ஞானியின் எண்ணமும், பல கோடி பாமர மக்களின் எண்ணமும் "தமிழரசு" கட்டுரை ஆசிரியர் தாஸ் குப்தாவின் எண்ணமும், ஒன்றே. ஆனால், என்னுடைய அநுபவம் வேறு. இறந்தபிறகு, மனிதன் ஆவியாக ஜீவித்திருக்கின்றான் என்பது அவர்கள் நம்பிக்கை. ஆனால் அவ்விதமாக ஜீவிப்பதாக நம்ப, போதுமான சாட்சியங்கள் இல்லை என்பது, எனது நம்பிக்கை. இவை இரண்டு நம்பிக்கைகளில், எதை நம்புவது என்பது தான் சங்கை?

எந்தச்சம்பவமாயினும், அதை நம்பவேண்டுமானால், அதற்குப் போதிய சாட்சியம் வேண்டும். போலீஸ்காரர் பார்த்தார்கள், விஞ்ஞானிகள் பார்த்தார்கள், பெரிய மனிதர்கள் பார்த்தார்கள் என்று சொல்வதில் பிரயோசனமில்லை. மணலைக் கயிறாகத் திரித்ததை நான், பார்த்தேன், ஐகோர்ட்டு ஜட்ஜுகள் பார்த்தார்களென்றால், அது மட்டும் போதா. எந்த வேளையிலும், தகுதியான பரீட்சை மூலமாக, அவ்விதமாக மணலைக் கயிறாகத் திரிப்பதைப் பார்க்கலாமா? அல்லது அறிஞர் பார்க்கக் கூடுமா? என்பது தான் கேள்வி? அவ்விதமாகப் பார்க்க முடியாதானால். அந்தச் சம்பவம், கழைக்கூத்தாடிகள் செய்யும் தந்திரமென அறிய வேண்டும்-சாதாரண சம்பவங்களாகிய மழை பெய்தல், காற்றடித்தல், பசியாற வுண்ணல், இன்னும் பல சாமான்ய சம்பவங்களைப் பார்க்காவிடிலும், நடந்ததென்று சொன்னால், அதனை நம்புவது ஸகஜம். ஆனால் இரத்த மழை பெய்தது, ஒருவன் மூன்றுபட்டி அரிசி சாதத்தை உண்டான், இறந்தவன் உயிர்த்தெழுந்தான், கல்லின் கண்களுக்குப் பதிலாக, தனது கண்ணைக் கண்ணப்பர் பிடுங்கி வைத்தார் என்றால், அவ்விடங்களில் நமது நம்பிக்கையைத் தாராளமாக விடாமல், கட்டி வைக்க வேண்டியதே. இவைகளுக்குப் போதுமான சாட்சியங்கள் உண்டா? என்று பார்கக வேண்டும். அம் மாதிரி பரீட்சை மூலமாக செய்ய முடியுமா? என்று கேட்க வேண்டும். ஒரு காலத்தில் தான் அத்தகைய சம்பவங்கள் நடக்கும், வேண்டும்போது நடவா என்றால், அவைகளைச் சந்தேகமாகத்தான் நோக்க வேண்டும்.

இம்மாதிரி சம்பவங்களில், பார்த்தது ஒன்றாய் இருக்க, அதனை அர்த்தப்படுத்துவது வேறாய் இருக்கலாம். கள்ளனைக் கட்டையில் பார்க்கின்றார்கள். கிளிஞ்சிலில் வெள்ளியைப் பார்க்கின்றார்கள். கானலை, நீரென்று காண்கின்றார்கள். இந்த இடங்களில் பார்த்தது ஒன்று, அர்த்தப்படுத்துவதுவேறு-கள்ளனையும், வெள்ளியையும், தண்ணீரையும் பாராதவனுக்குக்கட்டை கட்டையாகத் தான் தோன்றும். அது போலவே, பேய், பூதங்கள், ஆன்மா, உயிராவி என்று கேட்டறியாத மக்களுக்கு, இறந்த பிறகு, ஆவி, உயிர், ஆன்மா தோன்றுவதாகப் பார்க்க மாட்டார்கள். திருஷ்டாந்திரம் வேண்டுமானால், வெகு தூரம் போகவேண்டியதில்லை. நம்முடன் கூடப் பழகி வரும் உயர்தர மிருகங்களாகிய, நாய், குதிரை, குரங்கு, யானை முதலியவைகள் தங்கள் "ஆவி", "ஆன்மா", "பேய்", "பிசாசு" காண்பதாகத் தெரியவில்லை. உண்மையாகவே ஆன்மா இருந்தால், நமக்குத் தோன்றும் "ஆன்மா, அவைகளுக்கு ஏன் தோன்றா? மனிதனுக்கு திரேக மன்னியில், வெறும் "ஆவி" ஒன்றுள்ளதோ, இல்லையோ அது மானச நூலோருடைய ஆராய்ச்சி. விஞ்ஞான வகைகள், சுமார் இருபதுக்கு மேல் இருக்கின்றன. பூதபௌதிகம், (Physics and Chemistry) வைத்தியம் (Medical), சுகாதாரம் (Health and Hygiene), வான ஆராய்ச்சி (Astronomy), உயிர் விஞ்ஞானம் (Biology) அதன் உட்பிரிவுகளாகிய Zoology, Botany, Geology, Physiology முதலிய விஞ்ஞான வகைகள் Psychology என்னும் மானஸ விஞ்ஞானம் முதலிய விஞ்ஞான வகைகளில், பூதபௌதிக சக்திகளைத் தவிர வேறு எந்த வித ஆன்மா, உயிர், ஆவி உளதாகத்தெரியவில்லை. ஆனால் பல கோடி ஜீவ, அஜீவப் பொருள்களில், மனிதனுக்கு மாத்திரந்தான், அவன் இறந்த பிறகு, யாருக்கும் விளங்காத "ஆன்மா" வொன்று, சிறு பிள்ளைகளுக்கு மாத்திரம் ஏன் தோன்ற வேண்டும்?

நமது தாஸ் குப்தா அவர்கள் கூறும் சம்பவங்களை, அதாவது, தோற்றங்களை சற்று விசாரிப்போம், ஒன்று நமது வாசகர்கள் கவனித்தல் அவசியம். அதாவது, தாஸ் குப்தா, சொல்லும் வைபவம், பாமர மக்கள் இடத்தே அதிகமாகக் காணலாம். இரண்டாவது, மதங்களில்நம்பிக்கையுடையோர்கள் இத்தியாதிகதைகளை மிகுதியும் நம்புகின்றவர்கள் விசாரணை அதிகரிக்க அதிகரிக்க, இவ்வித தோற்றஙகள் குறைவு படுகின்றன. இந்த விஷயங்களை இந்த விசாரணையில் மனதில் வைக்க வேண்டும்.

தாஸ் குப்தா அவர்கள் ஒரு காலத்தில் இத்தியாதி கதைகளை நம்பாத நாஸ்திகராக இருந்தவராம். ஆனால் தனது வீட்டுக் குழந்தை யொன்று இறந்த பிறகு, அதன் "ஆவி" 1922ல் சில விநோத நடவடிக்கைகளைக் காட்டியதாம். இந்த நடவடிக்கைகளை ஆராய்ச்சி செய்தவர்கள், பல படித்தவர்களும், உயர்ந்த அதிகாரிகளும், போலீஸ் சூப்பிரிண்டண்டுகளுமாம். அவர்கள் ஆராய்ச்சியில் ஏற்பட்ட அநுபவங்கள், தன்னை, ஆவி உலகத்தில் (Spiritual World) நம்பும்படி செய்தன.

அந்தச் சம்பவங்களாவன:—

(1) குழந்தைகளுக்கு மாத்திரம் அந்த இறந்த பெண்ணின் ஆவி (Spirit) தோன்றியதாம். மற்ற யார் கண்ணுக்கும் தென்படவில்லையாம்.

(2) அந்தக் குழந்தையின் "ஆவி", நல்ல ஆபரணங்களுடனும், சேலைகளுடனும், தின்பண்டங்களுடனும், குழந்தைகளோடு விளையாடினதாம்.

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# சென்னை கடற்கரையில் 5000 பேர் கூட்டம்.

## ஈ. வெ. ரா. உபன்யாசம்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தோழர் எ. ராமசாமி முதலியார் அவர்களுக்கு விரோதமாய் தோழர் சத்திய மூர்த்தி அய்யர் நிறுத்தப்பட்டிருக்கிறார். முன்னவரைவிட பின்னவர் எந்த விதத்தில் யோக்கியதை உடையவர் என்று நான் கேட்கின்றேன். தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் 4000 ஓட்டிலிருந்து எண்ணப் போகிறேன் என்று சொல்லுகிறாராம். ஏனென்றால் சென்னையில் 4000 பார்ப்பனர்கள் ஓட்டுகள் இருக்கின்றனவாம். அவர்கள் அத்தனை பேரும் பார்ப்பனர், சத்தியமூர்த்திக்கே ஓட்டு செய்யப்போகிறார்களாம் இதை ஒரு பெருமையாகப் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அப்படியானால் தோழர் ராமசாமி முதலியார் அவருடைய ஓட்டுகள் 11000த்தில் இருந்து எண்ணக்கூடும் என்று ஏன் சொல்லக்கூடாது. 4000 பார்ப்பனர்கள் ஓட்டிருப்பதால் 4000த்தில் இருந்து எண்ணுவதானால் 11000 பார்ப்பனரல்லாதார் ஓட்டர்கள் இருப்பதால் ராமசாமி முதலியார் ஏன் 11000 த்தில் இருந்து எண்ணக்கூடாது என்று நான் கேட்கின்றேன். மொத்தம் 15 ஆயிரம் ஓட்டல்லவா?

பார்ப்பனருக்கு இருக்கும் புத்தியும், ஜாதி அபிமானமும், சுயமரியாதை உணர்ச்சியும், பார்ப்பனரல்லாதாருக்கு இல்லை என்று கருதுகின்றவர்கள்தான் 4000 பார்ப்பன ஓட்டுகள் இருக்கின்றதே என்று பயப்பட வேண்டுமே ஒழிய பார்ப்பனரல்லாதாருக்கு அறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் இருக்கின்றது என்று எண்ணுகின்றவர்கள் பயப்படவேண்டியதில்லை.

### தேசாபிமானம்.

பார்ப்பனர்கள் தேசாபிமானம் என்கின்ற ஒரு ஆயுதத்தை வைத்துக்கொண்டே பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறப்பார்க்கிறார்கள், தேசாபிமானம் என்பது வயிற்றுப்பிழைப்பு மந்திரம் என்று நான் வெகு நாளாகச் சொல்லி வருகிறேன்.

ஒரு தேசத்தில் ஏழை, பணக்காரன், மேல் ஜாதிக்காரன் கீழ் ஜாதிக்காரன் இவர்கள் எல்லோரிடமும் அபிமானம் வைப்பது முட்டாள் தனமேயாகும்.

ஏழை மக்களிடமும், தாழ்த்தப்பட்ட மக்களிடமும் அபிமானமிருப்பதுதான் நியாயமானதும், பயனுள்ளதுமான காரியமாகும்.

இன்று தேசாபிமானத்தின்பேரால் ஆதிக்கம் பெற்ற நாடுகள் எல்லாம் கொடுங்கோன்மையால் வறுமையால் துன்பப்படுகின்றன.

அது குடி அரசு நாடானாலும் சரி, ஜனநாயக நாடானாலும் சரி, சுயராஜ்யம் பெற்ற நாடானாலும் சரி எல்லாம் இந்தியாவைப்போலும் இன்னம் மோசமாயுந்தான் இருந்து வருகின்றன.

### சட்டசபையில் செய்வதென்ன?

இந்திய சட்டசபையில் காட்டப்போகும் தேசாபிமானம் என்ன என்பதெனக்குவிளங்கவில்லை. வெள்ளை அறிக்கையைத் தள்ளி விடப்போகிறார்களாம். காங்கிரசுக்காரர்களால் இது முடியக் கூடிய காரியமா? என்று யோசித்துப்பாருங்கள்.

### தோட்டத்தில் முக்கால் பாகம் கிணறு.

இந்திய சட்டசபையில் 144 பேர்கள் அங்கத்தினர்கள் என்றால் 40 பேர் நியமிக்கப்பட்டவர்களும், 30 முஸ்லீம்களும், 8 ஐரோப்பியர்களும், 4 வியாபாரிகளும், 7 ஜமீன்தார்களும் 2 சீக்கியர்களுமிருக்கிறார்கள். இவை போக பொது தேர்தல் 53 தான் இதில் காங்கிரசுக்காரர்கள் 35 அல்லது 40-பேர்கள் வரலாம் என்றே வைத்துக்கொள்ளுங்கள். ஒரு தோட்டத்தில் முக்கால் பாகம் விஸ்தீரணம் கிணறாக இருந்தால் அதில் என்ன வெள்ளாண்மை எடுக்கக்கூடும்? அது போல் இந்த 30, 40 பேர்கள் என்ன சாதித்துவிட முடியும். தோழர்கள் தாஸ், நேரு போன்ற "வீராதி வீரர்கள்" இருந்த காலத்திலேயே முதுகைக்காட்டிக்கொண்டு ஓடி வந்து விட்டார்கள் என்றால் இந்த தோழர்கள் சத்தியமூர்த்தி, முத்துரங்கம், அவனாசிலிங்கம், வெங்கிடாசலம் ஆகியவர்கள் என்ன சாதித்து விட முடியும் என்று எண்ணுகிறீர்கள்.

### பல்ட்டி.

இதற்கு முன் காங்கிரஸ் பெயரைச்சொல்லிக் கொண்டு போனவர்கள் எத்தனைபேர்கள் பல்ட்டி அடித்து விட்டார்கள் என்பது உங்களுக்குத்தெரியாதா? தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் முட்டுக்கட்டை போடுவதாகச் சொல்லி அங்கு போய் டாக்டர் சுப்பராயனை மந்திரியாக்கி அவருக்கு பிறைவேட்செக்ரட்ரியாய் இருந்து வரவில்லையா?

தோழர் சாமி வெங்கிடாசலம் அவர்கள் காங்கிரசுக்காரர்களை போன மாதத்தில் கூடக் கண்டபடி வைதுகொண்டிருக்கவில்லையா? மற்ற ஆட்களைப்பற்றி சொல்ல வேண்டுமா? வீணாகப் பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரத்தையும், கூலிகளின் விஷமப் பிரசாரங்களையும் நம்பி ஏமாந்து விடாதீர்கள். காங்கிரசுக்காரர்கள் பணத்தில் பல பத்திரிகைகள் நடக்கின்றன. காங்கிரசுக்கும், கதருக்கும் தீண்டாமை விலக்குக்கும் வசூல் செய்த பணங்கள் வசுவுப் பிரசாரத்துக்குப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதலால் நீங்கள் இவற்றை எதையும் கவனியாமல் உங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தி உங்களுக்கு எது சரி என்று தோன்றுகின்றதோ அதன்படி நடவுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்று பேசினார்.

# Decameron by Boccaccio
# "டெக்கமாரன்" அல்லது விகடக்கதைகள்.

(மொழிபெயர்ப்பாளர் தோழர் உடுமலை கனகராஜன்)

4.

இமோலா நகரில் பெர்டோடெல் லாமாஸ்ஸா என்னும் அயோக்கியன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் கெட்டநடத்தையுள்ளவனுதலால் அவன் தப்பித்தவறி ஒரு உண்மை சொன்னாலும் அவனை ஒருவரும் நம்புவதில்லை. தன்னுடைய சூழ்ச்சியும், தந்திரமும் அவ்வூரில் பலிக்காதென்று கண்ட அவன் மனமுடைந்து வெனிஸ் நகரை யடைந்தான். அங்கே தன்னுடைய துர்வாழ்க்கையை மறைமுகமாக நடத்தத்துணிந்து அவன் திடீரென்று ஞானோதயமாய் பக்தி மார்க்கத்தில் திரும்பி விட்டதாய் பாசாங்கு செய்துகொண்டு அவ்வூர் கிறிஸ்தவச் சந்நியாசிகளின் மடத்தில் சேர்ந்து கொண்டான். பிறகு அவன் கடும் தபசை மேற்கொண்டு மதுவையும் மாமிசத்தையும் (தனக்குக் கிடைக்காதபோது) ஒழித்துப் புசித்த வாழ்க்கையை மேற்கொள்ளலானான். அவன் கள்ளக்கண்ணீர் வடிப்பதிலும் தேர்ந்தவனுதலால் அதிசீக்கிரத்தில் அவ்வூராரின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் சம்பாதித்துக் கொண்டான்.

ஒரு நாள் லிசெட்டா என்னும் ஓர் இளமங்கை பாபமன்னிப்பிற்காக இவனிடம் வந்தாள். அவள் தானே சிறந்த அழகி என்ற மமதை கொண்ட ஒரு பேதை. அவள் தன்னுடைய பாபங்களையெல்லாம் சொல்லி முடித்தபின் அவளுடைய அழகையும் இளமையையும் கண்ட சந்நியாசி அவளுக்கு ஏதாவது கள்ளக் காதலனுண்டா என்று வினவினான். இதைக்கேட்ட அந்நங்கை, "ஓ பிதாவே! உமக்குக் கண்ணில்லையா? என்னைப்போல் சிறந்த அழகியை எங்கே யாவது கண்டிருக்கிறீர்களா? நான் இச்சித்த மாத்திரத்தில் எத்தனையோ காதலர்களை யடையலாம்; ஆனால் என்னுடைய பேரழகு தேவர்களுக்கே தகுந்ததாகும்" என்றும் இன்னும் பிறவும் சொன்னாள். அவளுடைய முட்டாள் தனத்தைக்கண்ட சந்நியாசி தனக்கு சரியான வேட்டை அகப்பட்டதென்று சந்தோஷங்கொண்டான். ஆயினும் புகழுரை கூறச் சமயம் அதுவல்லவென்றுநினைத்தும் தன்னுடைய பக்தியைக் காட்டிக் கொள்ளவும், அவளைக் கடிந்து அவள் சொல்லுவது வீண் அகம்பாவமான வார்த்தையென்று சொன்னான். பிறகு பாபமன்னிப்புப் பெற்றதும் அவள் தன் வீட்டிற்குச் சென்றாள்.

ஒன்றிரண்டு தினங்களுக்குப்பின் ஒரு நாள் தன்னுடைய நண்பனொரு

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# தனி உடைமை உலகில் அநீதமுறையில் நடைபெற்று வருகிற பொருளாதாரத்தின் தன்மை.

## கொடிய முதலாளித்துவ முறையில் ஏற்பட்ட பயங்கரமான வறுமை.

### அக்கிரமமான முறையை உலக சுபாவம் எனக்காண்பிக்கும் மதங்கள்!

(கொழும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

இந்தியாவில் 35-கோடிஜனங்களில் சரிபாதிக்கு மேற்பட்ட ஜனங்கள் பயங்கரமான வறுமையால் பீடிக்கப்பட்டு தாங்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். சைனாவில் 45-கோடி ஜனங்களில் பல கோடி மக்கள் வறுமையின் கொடுமை பொறுக்க முடியாமல் மடிந்து வருகிறார்கள். இவ்விரண்டு தேசங்களிலும் வறுமையால் அதிகமாகப் பீடிக்கப்பட்டு தவிக்கும் மக்கள் தொகையைப் போன்று இந்த உலகில் வேறு எந்தப்பாகத்திலும் இல்லவே இல்லை. வறுமை யென்னும் பயங்கரமான பூதம் சூழ்ந்து கொண்டு பல கோடி மக்களை விழுங்கிக் கொண்டிருக்கும் தேசம் இந்தியாவும், சைனாவும் என்று தான் சொல்லவேண்டும்.

இது நிற்க, பிரிட்டனில் 30-லட்சம் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குட்பட்டு ஜீவிக்க வழி யின்றி பரிதவிக்கின்றார்கள். முஸோலினியின் சர்வாதிகாரத்தின் கீழுள்ள "பெலிஸ் இட்டாலி"யில் 20-லட்சம் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குட்பட்டு பரிதாபகரமான முறையில் இருக்கின்றார்கள். விளைபொருளும், செய்பொருளும் குவிந்து கப்பல் கப்பலாக அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செல்வத்தில் பிறந்த "ஐக்கியக்குடி அரசு அமெரிக்கா"வில் இன்று ஒருகோடியே இருபது லட்சம் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஜீவிக்க ஒருவகையுமில்லாமல் கதறுகிறார்கள். இவர்களில் சிலர் சிறைச்சாலையையும், தூக்கு மரத்தையும் பொருட்படுத்தாமல் ஆயுதங்களைக் கொண்டு கொள்ளையடித்து ஜீவித்து வருகிறார்கள்! ஜீவிக்க வகையற்ற பெண்கள் விபச்சார வியாபாரம் செய்து ஜீவிக்கின்றார்கள்!! அமெரிக்காவில் கொள்ளையையும், கொலையையும், களவையும், விபச்சாரத்தையும் அரசாங்கம் எத்தனையோ கடுமையான சட்டங்களை இயற்றியும், திறமையான போலீஸாரைக்கொண்டு காவல் காத்தும், கொடிய தண்டனைகளுக்குட்படுத்தியும் தடுக்க முடியாமல் போய்விட்டது! அமெரிக்காவில் ஜெயில்கள் எல்லாம் குற்றவாளிகளால் நிரம்பப்பட்டு இருக்கின்றன!! அமெரிக்க அல்கெபோன், ஜெக்டைமண்ட் என்னும் கொள்ளைக் கூட்டத்தலைவர்களைப்பற்றி உலகம் அறிந்ததேயாகும். சமீபத்தில் அமெரிக்காவை நடுங்கவைத்த டிலின்ஜரை போலீஸாரால் பிடிக்க முடியாமல் போலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டான். டிலின்ஜரின் ஆரம்ப சரித்திரத்தை வாசித்துப்பார்த்தவர்களுக்கு டிலின்ஜர் எதனால் கொள்ளையடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கெட்டான் என்பதை அறிந்திருக்கலாம்!

இதைப்பற்றி அதிகமாகச் சொல்வானேன்? அமெரிக்காவில் வருடா வருடம் சுமார் 20,000 பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் துன்பம் அனுபவிக்க முடியாமல் தற்கொலைசெய்து கொள்கிறார்கள் அமெரிக்காவில் தற்கொலையைத்தடுக்கும் சங்கத்தின் தலைவர் "அமெரிக்காவில் தற்கொலை பெருகிக்கொண்டு போவதற்கு முக்கிய காரணம் வேலையில்லாத் திண்டாட்டத்தால் ஏற்பட்ட கொடியவறுமையே" எனக் கூறியுள்ளார். வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் மக்கள் மனம் போன போக்கில் தவறுதலான வழியில் பிரவேசித்து கெட்டுப்போவதைத் தெரிந்து கொள்ள வேண்டுமாகில் பிரக்யாதி பெற்ற போர் வீரனும் பிரான்ஸ் சக்கரவர்த்தியுமான நெபோலியனின் அரிய மொழியொன்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அதாவது:-

"வறுமையோ எல்லாவற்றிலும் வலிது, மனிதனுக்கு எத்துணை அறிவும், கல்வியும், சாமர்த்தியமும், குணமும் இருந்தபோதிலும் வறுமை தோன்று மிடத்து அவை யாவும் இறந்து போம்" (நெபோலியன்)

இத்தகைய கொடிய வறுமை நாம் சொல்லி வந்த தேசங்களில் மாத்திரமல்ல, முடியாட்சி போய் குடி ஆட்சி வந்து அதுவும் கைவிடப்பட்டு இப்போது ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி தோன்றியுள்ள ஜர்மனியிலும் 50 லட்சம் பேர் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். விபசாரத்தில் ஜீவிக்கும் பெண்கள் ஜர்மனியிலேயே அதிகம். இலங்கையில் வேலையில்லாமல் துன்புறுவோர் இவ்வளவு என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் இலங்கை அரசாங்கம் மற்ற அரசாங்கங்களைப்போல் வேலை யில்லாதோரைக் கணக்கெடுத்து அறிக்கை வெளியிடவில்லை. இதனால் தொகையை அறிய முடியாவிட்டாலும் மற்றைய தேசங்களில் திண்டாடுபவர்கள் போல் இத் தேச ஜனத்தொகைக்குத் தகுந்தாற்போல் ஒரு தொகை உண்டு. இன்னும் தற்போது உலகில் வேலை செய்துகொண்டிருப்பவர்களில் முக்கால்வாசிப் பேருக்கு வேலை செய்தும் ஜீவியத்திற்குப்போதிய அளவு உணவும், ஆடையும், இருப்பிடமும், வைத்தியமும், கல்வியும் கிடைக்காமல் மிக நெருக்கடியான முறையில் ஜீவியத்தைக் கடத்திக்கொண்டு வருகிறார்கள்.

உலக வறுமையைச்சுருக்கிச்சொல்வதென்றால் புதிய முறையில் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வாழ்க்கைக்குத் தகுந்த திட்டம் போட்டு விளை பொருளையும், செய் பொருள்களையும் சமமாக விநியோகித்து தேசத்தை ஒழுங்காக நடத்திக்கொண்டு வரும் சோவியத் ருஷியாவைத் தவிர உலகிலுள்ள எல்லாத்தேசங்களிலும் பெரும் பான்மையான ஜனங்கள் கொடிய வறுமைக்குட்பட்டு மீள வகையறியாமல் பரிதவிக்கிறார்கள் என்றால் தவறாகாது. உலக சுபாவம் இப்படியாவதற்குக் காரணம் என்ன வென்பதை விசாரித் துணர வேண்டியது இந்த உலகில் வாழ விரும்பும் ஒவ்வொருவருடையவும் பிரதானக் கடமையாகும்!

### 200 கோடி உலக ஜனங்களுக்கு வேண்டிய செல்வத்தை இப் பிரபஞ்சத்திலிருந்து பெற முடியாதா?

இன்றைய உலக ஜனத்தொகை 200 கோடி என்று தெரிகின்றன. இந்த 200 கோடி ஜனங்களுக்கும் அவசியமான உணவு, ஆடை, இருப்பிடம் முதலிய மனித வாழ்க்கைக்கு தேவையான செல்வங்களை இப் பிரம்மாண்டமான நிலத்திலும், நீரிலும் இருந்து பெற முடியாதா? என்னும் இப் பிரச்சினையைப் பற்றி ஈங்கு விசாரணை செய்வாம்.

### செல்வத்தால் நிறைந்த உலகம்!

இப் பிரம்மாண்டமான நிலத்திலும் நீரிலும் விளையும் உணவும், செய்யும் பொருளும் மற்றைய மனித வாழ்க்கைக்கு அவசியமான எல்லாச் செல்வங்களும் இன்றைய உலகிலுள்ள 200 கோடி மக்களைக் கொண்ட சமூகத்திற்கு சுகமாக ஜீவிப்பதற்கு (வாழ்வதற்கு)ப் போதிய அளவு இருப்பதாக இதைப் பற்றி விசாரித்துணர்ந்த மெய்ஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்! இஞ் ஞானிகள் சொல்லுவதுடன் நின்றுவிடவில்லை. கணக்கிட்டுத் திட்டங்கள் போட்டு வகுத்துக் காண்பிக்கின்றார்கள்!! அத்துடனும் அவர்கள் நின்றுவிடவில்லை இந்நிலத்திலுள்ள விவசாயத்திற்குப் பொருத்தமான ஒவ்வொரு ஏக்கர் நிலங்களையும் பயிர் செய்தால் இன்றைய உலகிலிருக்கும் 200 கோடி ஜனத் தொகையைப் போல் ஐந்து பங்கு ஜனத்தொகையைக் கொண்ட சமூகத்திற்குத் தேவையான உணவைப் பெற முடியும்!!!

[இந்த உலக ஜனத்தொகை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு-அல்லது ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பின் இன்றையதைவிட ஐந்து பங்காகப் பெருகி விட்டால் இந்தப்படி பயிர் செய்யாவிட்டால் இந்த உலகில் நமது வருங்கால சந்ததி எந்தப்படிதான்ஜீவிக்கமுடியும்?]

இப்போதிருக்கும் 200 கோடி ஜனத்தொகைக்கு மேல் அதிகமான ஜனங்களுக்கு சுகமாக ஜீவிப்பதற்குப் போதிய அளவு உணவு, உடை, இருப்பிடம், முதலிய மக்கள் வாழ்க்கைக்குத்தேவையான எல்லாச் செல்வங்களும் இன்றைக்கே உண்டுபண்ணப்பட்டு வருவதையும் சொல்லியுள்ளார்கள்!!!! இது இப்படியென்றால் எல்லாம் உள்ள உலகில் அநந்த கோடி மக்கள் உணவில்லாமலும், ஆடையில்லாமலும், இருப்பிடமில்லாமலும் துன்பப்படுவது என்ன காரணத்தினால் என்பதை விசாரித்துணர வேண்டியது பகுத்தறிவுள்ள நம் ஒவ்வொருவருடையவும் பிரதானக் கடமையாகும்!

### உலகில் மனித ஜீவியத்திற்கு போதிய செல்வம் இநக்கின்றது!

உலகில் தற்போது மனிதர்களுக்குள் இருக்கிற செல்வத்தையெல்லாம் நேர்மையான முறையில் ஒரே சமமாகப் பங்கிட்டுக்கொடுத்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் மனுஷிக்கும் கிடைக்கும் பங்கு அவர்களுக்குச் சுகமாக ஜீவிப்பதற்குப்போதிய அளவு எனக்கருதலாம்! அப்படியானால் இவ்வளவு கொடிய வறுமை மனிதர்களுக்குள் எப்படி ஏற்பட்டது?

### மனிதர்களுக்குள் கொடிய வறுமை ஏற்பட்டதற்குக்காரணம்

இக்கேள்விக்குத் துணிந்து சொல்லமுடியுமான—நிரூபித்துக்காட்டமுடியுமான சத்தியமானவிடை உலகில் Capitalism அதாவது முதலாளித்துவம் என்னும் முறைப்படி அரசாங்கம், தேசநிர்வாகம், பொருளாதாரம், சட்டதிட்டம், பழக்க வழக்கம், மதம்; நம்பிக்கை என்பவைகள் ஏற்பட்டிருப்பதனாலும்—அதன்படியே நடைபெற்று வருகிறதினாலும் உலக மக்களில் பெரும்பான்மையினர்களுக்கு வறுமையென்னும் கொடிய துன்பத்திற்கு ஆளாகி ஜீவிக்கவேண்டி ஏற்பட்டிருக்கிறதென்பதே!

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# ஸ்பெயினில் புரட்சி.

## பார்ஸிலோனா சம்பவங்கள்.

ஸ்பெயின் தேசம் என்பது ஐரோப்பாவில் மேற்குப் பக்கத்தில் உள்ளதும் பழமையான தேசமுமாகும். அது, 3, 4 வருஷங்களுக்கு முன்பு அரசரை நீக்கி குடிஅரசு நாடாக ஆக்கப்பட்டது.

அன்று முதல் இன்று வரை அங்கு உள்நாட்டுக்கலகமும், குழப்பமும் நடந்து கொண்டே வந்திருக்கிறது. இப்போது இந்த மாத துவக்கத்தில் ஆரம்பித்த குழப்பமானது இதுவரை நடந்து வந்த குழப்பங்களில் எல்லாம் பெரிய குழப்பம் என்றே சொல்லலாம்.

### ஸ்பெயின் அலங்கோலம்.

ஸ்பெயினில் நிலைமை இன்னும் மோசமாகவே இருந்து வருகிறது. முக்கியமான இடங்களிலெல்லாம் பீரங்கிகளைத் தயாராகவைத்திருக்கிறார்கள். குதிரைத் துருப்புகளும், மோட்டார் துருப்புகளும் நகர் முழுதும் சுற்றி பந்தோபஸ்து செய்து வருகிறார்கள். அடிக்கடி துப்பாக்கிகளால் சுட்டு வருகிறார்கள்.

### வெடிகுண்டுகள் வெடித்தன.

6-10-34 காலை 3 வெடி குண்டுகள் வெடித்தன. பொதுஜனப் போக்குவரத்திற்கான வண்டிகளை யெல்லாம் நிறுத்தி விட்டார்கள். பல பஸ்களையும், சொந்த மோட்டார்களையும் போலீசார் தங்கள் உபயோகத்திற்கு விடும்படி உத்திரவிட்டிருக்கிறார்கள். உணவுப்பொருள்களுள்ள கடைகள் மாத்திரம் தான் திறக்கப்பெற்றிருக்கின்றன. சகலரும் உணவுப் பொருள்களை சேர்த்து வருகிறார்கள். உணவு சாமான்களை நகருக்குள் கொண்டுவர அனுமதிக்க வேலை நிறுத்த தொழிலாளர்கள் மறுத்திருப்பதே அதற்குக் காரணம். நகர் எல்லைக்குள் உணவுப் பொருள்கள் போக்குவரத்து நடந்து வருகின்றன. ஆனால் கிராமப் பிரதேசங்களிலிருந்து அதிக உணவு சாமான்களெதுவும் வரவில்லை. இன்று மத்தியானத்திற்குள் நிலைமை திருப்திகரமாகாவிடில், உணவுப்பொருள்களுக்கு நிச்சயமாக கிராக்கி ஏற்பட்டுவிடும்,

### "லராக்ஸ் சர்க்கார் சட்ட விரோதம்"

பார்சிலோனாவில் புதிய சர்க்கார்,

கடலோனிய மாகாணம் தனிக்குடியரசாக இருக்கும் என்று பிரகடனம் செய்தவுடன் பார்சிலோனாவில் தற்காலிகமாக ஒரு புதிய சர்க்கார் ஸ்தாபிக்கப்படும். புதிய குடியரசுக்கு ஸ்பெயினின் மாஜி அபேதவாத மந்திரி தோழர் அஜானா, தலைவராக இருப்பார். லராக்ஸின் தலைமையில் இருக்கும் ஸ்பெயின் சர்க்கார், சட்டவிரோதமானதென்று இந்த புதிய குடியரசின் சார்பாக அறிவிப்பார்கள்.

### காடலோனியா தலைவருக்கு சிறை.

பார்ஸிலோனா மாளிகையை ஜெனரல் பாடேட் பீரங்கிகளால் எதிர்த்ததால், மாளிகையில் பெரும் துவாரங்களேற்பட்டிருக்கின்றன. அதிலிருந்து எவ்வளவு கடுமையாக சுட்டிருக்கிறார்களென்பதை அறிந்துகொள்ளலாம். காடலோனியா தலைவரான டான் கம்பெனிஸ் சரணமடையுமுன், அவரது மாளிகையின் பால்கனியை துருப்புகள் சுட்டு இடித்துவிட்டன. கடைசியில் இரண்டு வரிசை சிப்பாய்களுக்கு நடுவில் டான் கம்பெனிஸ் நிமிர்ந்த தலையுடன் வெளியே வந்தார். எனவே, அவர் காயமடையவில்லை யென்றே தெரிகிறது. மற்ற தலைவர்களைப் போல் கோட்டையிலுள்ள ஓர் கப்பலில், டான் கம்பெனியையும் சிறைப்படுத்தி யிருக்கிறார்களென்று தெரிகிறது. இன்னும்கூட நகரத்திலுள்ள பலவிடங்களிலும் வெளிக் கிளம்புவது கஷ்டமாக இருக்கிறது. ஜன்னல் வழியாக சரமாரியாக வரும் தோட்டாக்களிலிருந்து தப்புவதற்காக ஜனங்கள் இரவு முழுதும் மாடிப்படிகளில் பதுங்கிக்கொண்டு கஷ்டப்பட்டார்கள். சகல ஜன்னல்களையும் உடனே திறந்து வைத்து விடவேண்டுமென்றும், இல்லாவிடில் சுட்டுவிடுவார்களென்றும் ஜெனரல் பாடெட்டைச் சேர்ந்தவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். இதுவரை 500 லிருந்து 1000 பேர்கள் வரை மாண்டனரென்று தெரிகிறது. எனினும் அத்தொகையை நிச்சயமாகக் கணக்கிடுவது முடியாத காரியம்.

### கலகத் தலைவர்கள் மாயம்.

பல முக்கியஸ்தர்களான கலகத் தலைவர்களை இன்னும் பிடிக்க முடியவில்லை. தோழர் அஜானாவை போலீசார் வெகு மும்முரமாகத் தேடி வருகிறார்கள். மற்றவர்கள் எல்லைப் புறத்தைக் கடந்து சென்று விட்டார்களெனத் தெரிகிறது. காடலோனியா உள்நாட்டு மந்திரியான டெங்கால் உள்பட 3பேர்களும், கலகத் தலைவரும் ஜெனராலிதாத் மாளிகையிலிருந்து ரகசிய சுரங்க பாதைகள் வழியாக தப்பித்துக்கொண்டு போய் விட்டார்களெனத் தெரிகிறது. அப்பாதைகளை கலகக்காரர்கள் பீரங்கிகளை வைத்து மறைத்திருந்தார்கள்.

### கலகக்காரர்கள் ஆதிக்கம்

காடலோனியாவுக்கு வெளியிலுள்ள மாகாணங்களெல்லாம் இன்னும் கலகக்காரர்களுடைய ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றன. காடலோனியாவைச் சேர்ந்த மறைவிடங்களில் நிலைமை எவ்வித மிருந்து வருகிறதென்பதைப் பற்றியே எவருக்கும் தெரியவில்லை. வேலை நிறுத்தத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் தினம் கழிந்து விட்டது. எனவே அவர்கள் வர வர மோசமாகி வருகிறார்கள். மான்டிரேசன் என்ற இடத்தில் கலகக்காரர்கள் டவுன் ஹாலுக்கு எதிரில் மரத்தினால் செய்யப்பெற்ற தூக்கு மேடையொன்றை அமைத்திருக்கிறார்கள். அவர்களுடன் சேர மறுத்தவர்களையும், தாங்கள் கைது செய்த துருப்புகளையும் அதில் தூக்கிலிட்டிருக்கிறார்கள்.

### சங்கடத்திற்குக் காரணம்.

ஸ்பெயினில் டான்சாம்பர் மந்திரி சபை ராஜினாமா செய்ததிலிருந்து பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அபேத வாதிகள் புரட்சி ஏற்படுமெனத் தெரிந்தும், தலைவர் ஜாமோரா டான் லராக்ஸ் தலைமையில், கத்தோலிக்க விவசாயிகளுடன் ஓர் மந்திரி சபை அமைப்பதை ஆதரித்தார். ஸ்பெயின் குடியரசு பலம் பெற்று, சட்ட பூர்வமான அமைதியான முறையில் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டு மென்பதே லராக்ஸ் சர்க்காரின் நோக்கம்.

காடலோனியாவுக்கு சுயாட்சி கொடுப்பதை 1932ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15ந்தேதி ஸ்பெயின் பார்லிமெண்டில் அங்கீகரித்தனர். பார்ஸிலோனா கிரோனா, லெரிடா, டார்கோனா முதலியவைகள் சேர்ந்தது ஷை சுயாட்சி பிரதேசமாகும். அது 12,000 சதுரமைல் விஸ்தீரணமும், 30 லக்ஷம் ஜனத்தொகையும் கொண்டது.

### துருப்புகள்-கலகக்காரர்கள் சண்டை.

8-10-34 காலை துருப்புகளுக்கும், கலகக்காரர்களுக்கும் சண்டை நடந்தது. நகரிலுள்ள பலவிடங்களிலிருந்தும் துப்பாக்கிகளால் சுட்ட சப்தம் கேட்டது.

---

## மாட்ரிட் சம்பவங்கள்.

---

### ரயில்வேதொழிலாளர் வேலை நீக்கம்,

சங்கடமான நிலைமை.

வடக்கு ஸ்பெயினில் கலகக்காரர்களுக்கு வெற்றி யேற்பட்டிருக்கிறதெனினும், தெற்கு ஸ்பெயினில் நிலைமை அமைதியாகவே இருந்து வருகிறது. வடக்கே ரயில்வேபோக்குவரத்து சீர்குலைந்து கிடக்கிறது. எனவே, பிரயாணிகளுக்கு உதவியாக மோட்டார் பஸ்களையும், மோட்டார்களையும் உபயோகித்து வருகிறார்கள். மாட்ரிட்டில் உணவு சாமான்களுக்கு மிகவும் கிராக்கி ஏற்பட்டு வருகிறது. வேலை நிறுத்த தொழிலாளர்களின் தொகை அதிகமாகி வருவதே அத்தகைய நிலைமைக்குக் காரணம். சில தொழிலாளர்கள் விஷயத்தில் சர்க்கார் கடுமையான முறைகளைக் கைக் கொண்டிருப்பதுடன், சிலரை எச்சரித்து மிருக்கிறார்கள். இன்னும் சுரங்க ரயில்வே தொழிலாளர்களை வேலையிலிருந்து விலக்கியிருப்பதுடன், அவர்களுக்கு பதிலாக நாளை முதல் புதிய ஆட்களையும் சேகரிக்க தீர்மானித்திருக்கிறார்கள்.

இம்மாதம் 9ந்தேதியன்று ஸ்பெயின் பார்லிமென்டில் பல புதிய சட்டங்கள் நிறைவேற்றப்படும். ரத்துச் செய்யப்பட்ட கொலை தண்டனை மறுபடியும் சட்டத்தில் புகுத்தப்படும். சாதாரண ஜனங்களின் ஆயுதங்களை பறிமுதல் செய்வதற்கும் சட்டம் இயற்றுவார்கள்.

"சர்க்கார் மனித உயிர்கள் விஷயத்தில் தாட்சண்யம் காட்டவே விரும்புகிறது. ஆனால் புரட்சியை ஒடுக்க வேண்டியது அவசியமாயிருப்பதால் போலீசாரைத் தாக்குகிறவர்களும், தாக்க முயற்சிப்பவர்களும் சுட்டு வீழ்த்தப்படுவார்கள்" என்று சர்க்கார் அறிவித்திருக்கிறது.

### சர்க்கார் எச்சரிக்கையின் பலன்.

உடனே வேலைக்கு வராவிடில் சிப்பந்திகளையெல்லாம் வேலையிலிருந்து விலக்கி விடுவதாக சர்க்கார், ஆகாசவசனி மூலம் எச்சரிக்கைவிடுத்ததின் பயனாக, சர்க்கார் சிப்பந்திகளெல்லாம் இப்போது சரிவரவேலை செய்து வருவதாக சர்க்கார் அறிவித்து வருகிறார்கள்.

### ஸ்பெயின் முழுதும் ராணுவச் சட்டம்.

வேலை நிறுத்த மும்முரம்.

ஸ்பெயின் முழுவதிலும் ராணுவச் சட்டம் விதித்திருக்கிறார்கள். ரீமோஸா நகரத்தைப்பொதுவுடமைக்காரர் கைப்பற்றி விட்டனர். ஸ்பெயினில் எல்லா இடத்திலும் முக்கியமாக வாலன்ஷியா, மலகா, அலிகெண்டி முதலிய இடங்களில் வேலை நிறுத்தம் பரவி வருகிறது.

### 46 பேர் மாண்டனர் 1000 பேர்கள் கைதியாயினர்.

வெள்ளியன்று நடந்த கலகத்தில் 31 பேர் இறந்ததாகவும், 41 பேருக்கு காயமேற்பட்டதாகவும் 1000 பேருக்கதிகமாக கைதியாயிருப்பதாகவும் தெரிகிறது. சிலர் கூறுகிற விவரப்படி 46 பேர் இறந்ததாகவும், 100 பேருக்கதிகமாகவே காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

புதிய பிரதம மந்திரி தோழர் லராக்ஸை நடு இரவில் பார்த்தபோது அவர் சிறிதும் மனக்கலக்க மடையவில்லை. அவர் நிலைமை சரிபட்டுவிடுமென்று நம்பிக்கையுடனேயே இருக்கிறார்.

---

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க,

## புதுக்கோட்டையில் ஈ. வெ. ரா. சிதம்பரம்—ரங்கம்மாள் தம்பதிகள்.

கோட்டையூர் தோழர் சிதம்பரம் அவர்களுக்கும் தோழர் ரங்கம்மாள் அவர்களுக்கும், திருச்சியில் நடந்த விதவை-கலப்பு மணம் சம்மந்தமாய் மணமக்களுக்கும் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கும் ஒரு பாராட்டு விழா நடத்த சுமார் 2 மாத காலமாய் புதுக்கோட்டை வாசிகள் எதிர் பார்த்தும் பல காரணங்களால் ஒத்திப்போட்டுக் கொண்டே வரப்பட்டு முடிவாக 7-10-34ந் தேதி நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதன் படி தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஈரோடியிருந்தும், தோழர்கள் சிதம்பரம் ரங்கம்மாள் தம்பதிகள் கோட்டையூரிலிருந்தும் 7ந்தேதி காலை புதுக்கோட்டை வந்ததும் ரயில் மேடையில் இருந்து பாண்டு வாத்தியங்களுடன் வரவேற்றுத் தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு பி. எ. பி. எல். அவர்கள் ஜாகைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள் மற்றும் அக்கம் பக்கம் கிராமங்களிலிருந்தும், செட்டிநாட்டில் இருந்தும் தஞ்சை திருச்சி ராமனாதபுரம் மதுரை ஜில்லாக்களில் இருந்தும்சுமார்200 பிரதிநிதிகள்வரை பெண்களும் ஆண்களுமாய் விருந்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு:—

தோழர்கள் நா. கா. சித. நாச்சியப்பா, மு. வள்ளியப்பா, வெ. நடேசஞ் செட்டியார், அ. க. அ. சித. அள. சிதம்பரஞ் செட்டியார், பெ. று. அண்ணாமலை செட்டியார், பெரி. நா. லெட்சுமணன் செட்டியார், பெ. சி. அழ. சித. வள. சிதம்பரம், அ. ப ள. பழனியப்ப செட்டியார், பி. எஸ். ஆர். எம். குமரப்பன், அ. ந. அ. அண்ணாமலை செட்டியார், தண்ணீர் மலையான், லெ. அண்ணாமலை செட்டியார், கா. ஏகப்பன், வ. யி. சு. முருகையன், அரு. அ. சோமசுந்தரம், கு. ப. சு. ரா. செட்டியார், ரு. மு. ரு. ராமசாமி செட்டியார், எ. திருமலைசாமி, ராய. சிதம்பரஞ் செட்டியார், அழ. அருணாசலஞ் செட்டியார், சித. கருப்பஞ் செட்டியார், வள்ளியப்ப செட்டியார், அ. க. அ. சித. வெ. சிதம்பரஞ்செட்டியார், லெ. ராம. அண்ணாமலை செட்டியார், முத்துநாராயணன், அ. கதி. கதிரேசன் செட்டியார், சுக. சுப. சுப்பிரமணியன் செட்டியார், வெ. மு. சித. கா. காசி செட்டியார், சொ. முருகப்பா, ராம சுப்பையா, அ. பொன்னம்பலனார், அல்போன் லக்காஷ், மரகதவல்லியம்மாள், தனம், ராஜம்மாள், எல். பியாரிஜா, (முஸ்லீம் பெண்) டி. ஆதிலக்ஷிமி, நம்பிக்கைமரி, சுந்தரி, லெட்சுமி அம்மாள், பங்காரு அம்மாள், வேணம்மாள், நீலாவதி அம்மாள், அம்மாளு அம்மாள், ருக்குமணி அமமாள், பொன்னழகு அம்மாள், தனலக்ஷிமி அம்மாள், சீனி, சகுந்தலா, லெட்சுமி, கனகாம்புஜம், வல்லம் வி. ராஜம் முதலியவர்களாவார்கள்.

காலை சிற்றுண்டியும், பகல் சாப்பாடும் தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு அவர்க்ள் வீட்டில் சிறப்பாக நடந்தேறியது.

பின்னர் 4 30 மணிக்கு ஜாகையில் இருந்து டவுன் ஹால் மண்டபத்துக்கு எல்லோரும் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஒரு புகைப்படமெடுக்கப்பட்டு ஆங்கில முறையில் சுமார் 500 பேர்களுக்கு தேநீர் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. உள்ளூர் பிரமுகர்கள் பலரும் வந்துஇந்த விருந்தில் கலந்து கொண்டார்கள் விருந்து நடந்ததும் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்கு சுமார் 1000 பேருக்கு மேலாகவே ஆண்களும், பெண்களும் எல்லா வகுப்புக்காரர்களுமாக விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் கூட்ட ஆரம்பத்தில் விருந்தினர்களை அறிமுகப்படுத்தும் முறையில்சிலவார்த்தைகள்பேசி கோட்டையூர் தோழர் அ. க. சு சி. த. சிதம்பரம் செட்டியார் (ராஜா சர் அண்ணாமலை செட்டியார் மாப்பிள்ளை) அவர்களை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் படி கேட்டுக்கொண்டார். பெருத்த கரகோஷத்தினிடையே அவர் தலைமை வகித்து விருந்தினர்களைப் பாராட்டிப்பேசியபின்புதோழர்ஈ.வெ. ரா. அவர்களுக்கும்சிதம்பரம்ரங்கம்மாள்தம்பதிகளுக்கும்வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது பிறகுதோழர்கள் மரகதவல்லி முருகப்பா, சுந்தரி, நீலாவதி, ராஜம், ரங்கம்மாள் ஆகியவர்கள் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்பட்ட பலனும் சிறப்பாக பெண்கள் நிலை உயர்த்தப்பட்டதும் பற்றி விஸ்தாரமாய் பேசி பெண்கள் விஷயத்தில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களையும் பற்றிப்பேசினார்கள். பிறகுதோழர்கள் முருகப்பா பொன்னம்பலம், அள. சித. சிதம்பரம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்களும் சு. ம. இயக்கம் சீர்திருத்தம் என்பவைகளைப்பற்றிப் பேசினார்கள் (ஈ. வெ. ரா. பிரசங்கம் தனியாய் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.)

முடிவில் தலைவர் சிதம்பரம் அவர்கள் தோழர் ஈ வெ ராமசாமி அவர்களின்தொண்டைப்பற்றியும் இயக்கத்தைப்பற்றியும் முடிவுரையாகப் பேசினார் தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் தலைவருக்கும், வந்திருந்தவர்களுக்கும் வந்தனம்கூறக்கூட்டம் முடிவுக்கு வந்தது.

### இரவு.

இரவு தோழர் ராஜம்மாள் அவர்கள் வீட்டில் வெளியூரிலிருந்து வந்திருந்தசுமார் 200 பேர்களுக்கும்விருந்து நடந்தது.

### விருந்துக்குப் பின்

விருந்துக்குப்பின் புதுக்கோட்டை சமஸ்தான செங்குந்த மகாஜனசங்க தோழர்கள் சார்பாய் பொன்னம்பலம் தலைமையில் தோழர் ஈ. வெ. ரா. வுக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்டது தோழர் ஈ. வெ. ரா. பதிலளித்த பிறகுதலைவர் பொன்னம்பலம் அவர்கள் செங்குந்தமரபுஸ்திரீ புருஷர்கள் ஆகிய இருதிறத்தாரும் தங்களது முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டு மென்று முடிவுரையாகப் பேசினார்.

### சு. ம. திருமணம்.

பிறகு அதே கூட்டத்தில் அதே கொட்டகையில் சுயமரியாதைத்திருமணம் ஒன்று நடந்தது திருமணத்தைப்பாராட்டி பலர் பேசிய பின் இரவு 12 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது.

### மறுநாள்.

மறுநாள் காலையில் தோழர் ஈ வெ ரா, அ பொன்னம்பலம் ஆகியவர்கள் காரைக்குடிக்கு சென்றுவிட்டு மாலை கோட்டையூருக்கு வந்து அங்கிருந்து 8ந் தேதி இரவு ஈ. வெ ராமசாமி அவர்கள் ஈரோட்டிற்கு புரப்பட்டு விட்டார்கள் தோழர்கள் லக்காஷ், நம்பிக்கை மேரி, அருணகிரி சுந்தரி, நீலாவதி ராமசுப்பிரமணியம், சுப்பையா முதலியவர்கள் கோட்டையூர் சிதம்பரம் ரங்கம்மாள் ஆகியவர்கள் அழைப்புக்கிணங்க கோட்டையூருக்கு பிரயாணமானார்கள்.

புதுக்கோட்டையில் சுயமரியாதைக்காரர்கள் கூட்டம் முதல் தடவை ஆனதினால் வட வேற்புக்கும் விருந்துக்கும் உள்ளூரில் அதிக அழைப்பு இல்லையானாலும் கூட்டம் ஒரு மகா நாடுபோல் ஊர்முழுதும் தடபுடலாய் இருந்ததோடு சீக்கிரத்தில் இங்கு ஒரு மகாநாடு நடத்த வேண்டும். என்கின்ற எண்ணம் யாவருக்கும் ஏற்பட்டுமிருக்கிறது.

# விவசாயிகள் மகா நாடு.

## டாக்டர் வரதராஜுலு பிரசங்கம்.

சேலம் ஜில்லா ஹஸுர் தாலுக்கா விவசாயிகள் மகாநாடு 9-10-34 மாலை தோழர் கே. ஏ. நாச்சியப்பகவுண்டரின் தலைமையில் கூடியது. இம் மகாநாட்டை டாக்டர். பி. வரதராஜுலு அவர்கள் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:— தோழர்களே

விவசாயிகள் படும் கஷ்டம் சொல்ல முடியாது. இவ்விஷயத்திலே அரசியல் தலைவர்களும். சர்க்காரும் போதிய சிரத்தை காட்டாதிருப்பது மிகவும்வருந்தத்தக்கதாகும். வரிப்பளுவு தாங்க முடிய வில்லை. அடிக்கடி மறுபைசல் செய்து வரியையும் உயர்த்தி விடுகிறார்கள்.

20வருஷ காலமாகதொழிலாளர் விஷயமாக நான் உழைத்திருப்பதிலிருந்து கைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைபாடுகளே அதிகமாக கவனிக்கப்படுகின்றனவென்பதை நானறிவேன். அத்தொழிலாளர்கள் கட்டுப்பாடாக இருக்கிறார்கள். சர்வதேச ஆதரவும் அவர்களுக்கு இருந்து வருகிறது. விவசாயிகளோ கட்டுப்பாடாக இல்லை. தங்கள் குறைகளையும் கஷ்டங்களையும் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறவும் அவர்களால் முடியாதிருக்கிறது.

### முதல் கிடையாது.

இத்தேசத்திலே 100க்கு 80 பேர்கள் ஜீவனத்திற்கு விவசாயத் தொழிலையே நம்பி இருக்கிறார்கள். இவர்களிடம் முதல் கிடையாது. இதுமுக்கியமான குறையாகும், இத்தேசத்திலே ஏராளமான பணமிருக்கிற தெனினும் அது உபயோகிக்கப்படவில்லை. இதனால் தானியங்கள் விலை குறைந்து விட்டது. குடியானவர்கள் ஜீவனத்திற்கும் தாளம் போட வேண்டியிருக்கிறது இதுவரை வெள்ளாண்மையும் மேலாக இருந்துவந்தன. இப்போதோ பஞ்ச நிலைமை ஏற்பட்டு விடும் போலிருக்கிறது. ஆகையால் சர்க்காரும், தலைவர்களும் குடியானவர்களின் கஷ்டங்களையும் குறைகளையும் உடனே கவனிக்க வேண்டுகிறேன்.

### கடன் பளுவு.

நிற்க, குடியானவர்களின் கடன் கஷ்டம் தாங்க முடியாமலிருக்கிறது. முதலில் இக்கஷ்ட நிவாரணத்திற்கு வழி செய்யவேண்டும். நிலத்தின்மீது வரி விதிப்பதற்குப் பதிலாக, நிலவருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வரி விதிக்க வேண்டு மென்று நான் கூறுவேன்.

நில அடமான பாங்கிகளால் ஏழை விவசாயிகளுக்குப் பயனேதுவுமில்லை. நிலத்தின் மீது வாங்கும் கடனுக்கு அவர்கள் 8 பர்சண்ட் வீதம் எப்படி வட்டி செலுத்த முடியும்? இப்பொழுதுள்ளநிலையில் மிராசுதாருக்கு, வருமானம் 3 பர்சண்ட் வட்டியே கட்டுவதாக இருக்கும். அப்படியிருக்க கடனுக்கு 8 பர்சண்ட் வட்டி எவ்விதம் செலுத்த முடியும்? இம்முக்கிய பிரச்னையை சர்க்கார் உடனே கவனிக்க வேண்டும்.

விவசாயிகள் விஷயத்தை அகில இந்திய பிரச்சினையாக்க வேண்டும். குடியானவர்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க தேசத்திலே கட்டுப்பாடான முறையில் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

# திருச்சியில் ராஜகோபாலாச்சாரியார்

## சரமாரியான கேள்விகள்.

### கேள்விகளுக்கு பதிலில்லை.

(ஒரு நிருபர்)

7-10-34ந்தேதியன்று மாலை சுமார் 6-30மணிக்கு திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் காங்கிரஸ் பொதுக் கூட்டமொன்று விருது நகர் தோழர் காமராஜ் நாடார் தலைமையில் கூடியது. அப்போது தோழர்கள் டாக்டர் ராஜன், ராஜகோபாலாச்சாரி, சிதம்பரஸ்வாமிகள், வக்கீல் ஆர். சீனிவாசய்யர், தேசியக் கல்லூரி பிரின்ஸ்பால் சாரநாத அய்யங்கார், என். ஹாலாஸ்யமய்யர் முதலான காங்கிரஸ் பிரமுகர்களும், சுயமரியாதைச் சங்கம் பகுத்தறிவுச் சங்கத்தைச்சேர்ந்த தோழர்களுமாக சுமார் 1000-பேர்கள் வரை குழுமியிருந்தனர்.

கூட்டத்தில் முதலாவதாக சிதம்பர சுவாமி புராணப் பிரசங்கம் செய்தார். பின்பு ராஜகோபாலாச்சாரியார்சுமார்அரைமணி நேரம் வரை பழங்கால அரசியல் பொருளாதார நாகரீக முறையைப்பற்றி, கூறி விட்டுத் தற்கால அரசியல் முறையை ஒப்பிட்டு ஜஸ்டிஸ், சுயமரியாதைக்காரர்களை மறைமுகமாகத் தாக்கி சட்டசபைத் தேர்தலைக் குறித்துப் பேசி வரும்போது பகுத்தறிவுச்சங்கத்தார்கேள்வித்தாள்களைதோழர்ஆச்சாரியாரிடம்கொடுத்தார்கள்.உடனே தோழர் ஆச்சாரியார் கேள்விகளை நன்றாய்ப் படித்த பின்னர் கடைசியாக அவசியமிருந்தால் பதில் சொல்லுவதாகக் கூறினார். அதுபோது கூட்டத்தின் பல பாகத்திலிருந்தும் பலர் கேள்விகளுக்குப்பதில் அளித்து விட்டுத்தான் மேலே பேச வேண்டுமென்று ஆக்ஷேபித்தனர். ஆச்சாரியார் கடைசியில் தான் பதில் சொல்ல முடியுமென்றும், இது என்னுடைய கூட்டமென்றும், என்னுடைய அபிப்பிராயப்படித்தான் நான் நடப்பேனென்றும், இஷ்டமிருந்தால் இருக்கலாமென்றும்சொன்னார். அச்சமயம் தோழர் ஹமீத்கான்என்பவர் மேடையில் பேச தோழர் ஆச்சாரியாரை அனுமதி கேட்க, அவர் மறுக்கவே ஹமீத்கான் பிடிவாதமாகவே தாங்கள் பேசியதற்கு மறுப்பு சொல்ல வேண்டுமென்று மேடையைக் கைப்பற்றி எழுந்து பேச ஆரம்பிக்கவே, தலைவர் தானாகவே பேச அனுமதித்தார். உடனே ஆச்சாரியார் ஹமீத்கான் பேசக்கூடாது என்று ஆட்க்ஷேபிக்கக் கூட்டத்தார்கள் அவர் பேசத்தான் வேண்டும் என்று ஆர்ப்பரிக்கவே ஹமீத்கான் தென்னாட்டு காங்கிரஸ்தலைவர்களின் சுயநலத்தையும், ஹரிஜன சேவாசங்க யோக்கியதையையும், அதன் நிதிதுர்வினியோகப்படுதல் குறித்தும், காந்தியார் அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஆச்சாரியாரும், அவர் கூட்டத்தாரும் நடந்து வருவதைப்பற்றியும், ஆலயப்பிரவேச மசோதாவைக் குறித்து ஆச்சாரியாரின் மாறுபட்ட அபிப்பிராயத்தைப் பற்றியும், பேசிவரும்போது கூட்டத்தில் அமைதிநிலவிசில ஜனங்கள் உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென்று தோழர் ஆச்சாரியார் அமைதியைக் குலைக்கும் பொருட்டு, தான் தற்சமயம் கடைசியில் சொல்லுவதாகவிருந்த பதிலை இப்போது சொல்லுகிறேன் என்று தலைவர் அனுமதியன்னியில் மேடைமீதேறி கேள்விகளைப்படிக்க ஆரம்பித்தனர். அப்போது கூட்டத்தினர் ஆச்சாரியாரைத் தடுத்து ஹமீத்கான் பேசட்டும் என்று சப்தித்தனர். ஆச்சாரியர்விடாமுறையில்மறிக்கவே கூட்டத்தில் குழப்பமேற்பட்டு மேடைமீதிருந்த ஆச்சாரியாரை கீழே உட்கார வைக்க பலர் மேடைமீது தாவினர். ஆனல் ஆச்சாரியார் பிடிவாதமாக அசையாமல் நின்று கொண்டிருக்கவே ஹமீத்கான் மறுபடியும் பேச ஆரம்பித்தார். அதற்கு ஆச்சாரியார் தடைகளை உண்டாக்கிக் கொண்டே இருந்தார்கள் இவ்விதமாகவே மேடையில் இருவருக்கும் வாக்கு வாதம் பலமாகவே கூட்டத்தில் குழப்பம் அதிகரித்து. இதனல் சுயமரியாதைக்காரர்களுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் வாக்கு வாதம் ஏற்பட ஆரம்பித்தது. காந்திக்கு ஜே, ராஜாஜிக்கு ஜே என்று ஒரு சாராரும், ராமசாமிக்கு ஜே. ஷண்முகத்துக்கு ஜே, டாக்டர் வரதராஜலுக்கு ஜே என்று மற்றொரு சாராரும் ஆரவாரித்தனர். அச்சமயம் மேடை மீதிருந்த நேஷனல் காலெஜ் பிரின்ஸ்பால் தோழர் சாரநாத ஐய்யங்கார், தோழர் ஷண்முகம் அவர்கட்கு ஜே என்றவுடன் ஆத்திரங்கொண்டு ஒருமைப் பதங்களைஉபயோகித்து அயோக்கியன் என்பதுபோன்ற இழிவான பதங்களைப் பிரயோகம் செய்து ஷண்முகத்துக்குமா ஜே என்று ஆணவத்துடன் கூற கூட்டத்திலிருந்த வாலிபர்கள் சாரநாத ஐயங்காரைக் கண்டித்துப் பேச ஆரம்பித்தார்கள், அப்போது ஆச்சாரியார் சமாதானம் செய்ய எத்தனித்தும் பயன்படாமல் கூட்டத்தில் எதிர்ப்புகளும், ஆவேச கோஷங்களும் வானமளாவ முழங்கிய வண்ணமிருந்தன. சுமார் ஒரு மணிநேரம் வரை ஆச்சாரியார் பேசுவதும்,ஹமீத்கான் அதே மேடையில் நின்று அவருடன் வாக்குவாதங்கள் செய்வதும், ஹமீத்தான் பேசட்டும், பேசட்டும் என்று சத்தமிடுவதும் அதனல் ஹமீத்கான் மீண்டும் பேச ஆரம்பிக்கவே ஆச்சாரியார் ஹமீத்கானை நோக்கி தமது பொறுமைக்கும் எல்லை உண்டென்றும், இனி தம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்றும், கூட்டத்தைக் கலைத்து விடுவேனென்றும் பயமுறுத்திக்கூற ஹமீத்கான்பேச்சைஇடையிடையே தடை படுத்திக்கொண்டிருந்தார். இதற்குள் காங்கிரஸ்காரர்கள் போலீஸ் உதவியை நாடி சப் இன்ஸ்பெக்டர், ஜவான்களுடன் கூட்டத்தில் தோன்றி அமைதி செய்ய யத்தனித்தும் அமைதி நிலவவில்லை.பின்பு ஆச்சாரியார் ஹமீத்கானைமேடைமீதுசிறிது நேரம் உட்காரும்படிக்கும், தான் கேள்விகளுக்குப் பதில் சொன்னவுடன் அவரை பேச விடுவதாகவும் கூறவே ஹமீத்கான் இசைந்து மேடைமீது உட்கார்ந்தார். ஆச்சாரிக்கும் பின்னல் பல பிரமுகர்கள் பேசுவதாக நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்தும் ஆச்சாரியார் கீழ்கண்ட கேள்விகளுக்குமட்டும் கீழ்கண்டவாறு பதிலளித்து விட்டு மற்ற கேள்விகளுக்கும் மழுப்பலான பதிலளிக்கும்போது யாரோ விஷமிகளால் கற்கள் வீசப்படவே கூட்டம் கலைவுற்றது.

#### முதலாவது கேள்வித்தாள்.
#### கேள்விகளும், பதிலும்.

கேள்வி:— (1) சமதர்மக் கொள்கையைப்பற்றி தங்கள் கருத்தென்ன?

பதில்:— சமதர்மக் கொள்கை தனக்கு உடன்பாடுதான் ஆனல் அதை சுயராஜ்யம் வந்தவுடன் பார்த்துக் கொள்ளலாம்.

கே:— (2) அவனாசிலிங்கம்செட்டியார் தேசத்தொண்டை விட, டாக்டர் வரதராஜலு அவர்களின் தேசத்தொண்டு எந்த வகையில் குறைந்தது?

ப:— தேசத்தொண்டுக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. காங்கிரசில் கையெழுத்துப் போட்டவர்களைத்தான் நிறுத்த முடியும்.

கே:— (3) ஹரிஜன நிதிக்காகப் பொதுஜனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பெருந்தொகையை இந்திய சட்டசபை தேர்தலுக்குச் செலவு செய்து வருவதாகச் சொல்லப்படுவது உண்மைதானா?

ப:— அவ்வாறு செலவு செய்யப்படவில்லை.

(கே:— 4) ஆட்டவா ஒப்பந்தத்தைப் பற்றி, சர் ஆர். கே. ஷண்முகத்தின் மேல் விஷமப் பிரசாரம் செய்கிறீர்களே, அவ்வொப்பந்தம் இந்திய மக்களுக்கு எவ்வகையில் கெடுதி என்று புள்ளி விவரங்களுடன் நீங்கள் இப்போது விளக்குவீர்களா?

ப:— ஆட்டவா ஒப்பந்தத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனல் வர்த்தகர்கள் எல்லோரும் அதை ஆட்சேபிப்பதால் நானும் ஆட்சேபிக்கிறேன்.

(கே:— 4, a) ஷை ஒப்பந்தத்தைப் பற்றி, தோழர் காந்தியார் கண்டிக்காமலிருக்க, தாங்கள் மட்டும் கண்டிப்பதின் கருத்தென்ன?

ப:— காந்திக்கு இது சம்பந்தமில்லை.

(கே:—5) 4 அணா கொடுத்து காங்கிரஸில் சேர்ந்து விட்டால் அயோக்கியனும் யோக்கியனாகி விடுவானா? அப்படியானல் காங்கிரஸில் உள்ளவர்கள் யோக்கியர்களாயிருக்கும் போது தோழர் காந்தி ஏன் காங்கிரஸை விட்டு விலக வேண்டும்?

ப:— 4 அணா கொடுத்து காங்கிரஸில் சேராதவர்களை தேசத் துரோகிகள் என்று நான் சொல்லியிருந்தால் அது தவறுதான். காந்தி காங்கிரஸை விட்டு விலகினாலும் காங்கிரஸிற்குத் தான், வேலை செய்வார்.

(கே:—5) கோவை மகாநாட்டில் ஆலயப் பிரவேச பிரசாரம், காங்கிரஸ் செய்யப்போவதில்லை யென்று தாங்கள் சொன்னதின் மர்மமென்ன சனாதனிகளை ஏமாற்றவா? ஆனல் காங்கிரஸின் வாக்குறுதிகள் எங்கே?

ப:— பொது ஜன அபிப்பிராயம் இருந்தால் தான் ஆலயப் பிரவேசம் முடியும். அதற்கும் வாக்குறுதிகளுக்கும் சம்மந்தமில்லை.

பின் கீழ்க்கண்ட இரண்டாவது கேள்வித்தாளைக்கொடுத்தார்கள். அதற்கு பதில் கூறவில்லை.

#### (கேள்வித்தாள் 2)

1. சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இந்திய நாட்டு விடுதலைக்கு பாடுபட்டு வந்த பல கக்ஷிகளை தேச க்ஷேமத்திற்கு விரோதமான கக்ஷிகள் என்று கூறி வந்த காங்கிரஸ் கக்ஷியானது இப்போது தனது பரிசுத்தமான நிர்மாண வேலைகளைக் கைவிட்டு விட்டு காங்கிரஸ், அபேதவாதிகள் கூறுவதைப்போல் காங்கிரஸ் ஒத்துழைப்பு திட்டமான சட்டசபைப்பிரவேசம் என்பதில் பிரவேசத்தைப் பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

2. வெள்ளை அறிக்கையைக் கண்டிப்பதற்காக சட்டசபைக்குப் போகப் போகிறீர்களே! சட்ட சபையிலேயே வெள்ளை அறிக்கைத் திட்டம் நிறைவேறிவிடுமானல் உடனே சபையை விட்டு வெளியேறி விடுவீர்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

## புதுக்கோட்டையில்

# தோழர் ஈ. வெ. ரா.

## உபந்யாசம்.

## ஆஸ்திகம்—நாஸ்திகம்.

தலைவரவர்களே, தோழர்களே!

இந்தப் புதுக்கோட்டையில் எங்களுக்காக நடத்தப்பட்ட ஆடம்பர வரவேற்புகளுக்கும், விருந்துகளுக்கும், இங்கு நடைபெறுகிற நடவடிக்கைகளுக்கும் நான் நன்றி செலுத்துவதுடன் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தோழர்கள் ரங்கம்மாள்-சிதம்பரம் தம்பதிகள் சீர்திருத்தமுறையில் விவாகம் செய்து கொண்டவர்களாதலால் அவர்கள் பாராட்டுதலுக்கும், வரவேற்புக்கும் உரியவர்கள் ஆவார்கள். ஆனால் எனக்கு எதற்காக இந்த ஆடம்பர வரவேற்புகள் என்பது எனக்கே விளங்கவில்லை.

இந்த ராஜ்யம் ஒரு சுதேச சமஸ்தானமாதலால் இங்கு நமது இயக்கத்தைப்பிரசாரம் செய்வதற்கு சமஸ்தானத்திலோ, அல்லது வேறுவகையிலோ ஏதாவது இடையூறு ஏற்படுமோ எனக் கருதி இந்த முறையில் ஏதாவது வகை செய்யக் கருதி தோழர் வல்லத்தரசும் அவர்களது தோழர்கள் முரு. தேனப்பன், அ. செ. சு. சாமிநாதன், லெ. சோமசுந்தரம், கா. ச. சடையணன், சி. பெ. க. பெரிய கருப்பன் முதலியவர்களும் இந்த ஏற்பாடு செய்தார்களோ என்று எண்ணுகிறேன். (சிரிப்பு)

இந்த இரகசிய ஏற்பாட்டிற்கு இவ்வளவு பேர்கள் வந்து கூடி இருப்பது எனக்கு மகிழ்ச்சியாய் இருப்பதோடு இந்த வரவேற்புப் பத்திரத்தில் கண்ட வாக்கியங்களைக் கவனிக்கும்போது சுயமரியாதை இயக்க சீர்திருத்தத் துறையில் இந்த ராஜ்யம் உச்சஸ்தான விருப்பம் கொண்டதாகவே தெரிகின்றது, வரவேற்புப் பத்திரத்தில் என்னைப்பற்றிப் புகழ்ந்திருக்கும் விஷயங்களை நான் ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும் அதில்கண்டுள்ள அதிதீவிர வாக்கியங்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு அதற்காக நன்றி செலுத்தவேண்டியவனாயிருக்கிறேன்.

இந்த வரவேற்பு ஆடம்பரங்கள் புதுக்கோட்டை சமஸ்தான இளைஞர் சங்கத்தின் பேரால் இருப்பதால் இளைஞர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் பிறகு பத்திரத்திற்குப் பதில் சொல்லுகிறேன்.

இளைஞர்கள் என்பவர்கள் தூய்மையான மனதையுடையவர்கள். அவர்கள் உலக வாழ்க்கை வியாபாரத்தில் நுழையாதவர்களாதலால் அவர்கள் எண்ணமும், காரியமும் ஒன்றாய் இருப்பதற்குச் சௌகரியம் உண்டு. ஆனால் அவர்களுக்குப் போதிய உலக அனுபவம் ஏற்படக் காலம் இல்லை. ஆதலால் இளைஞர்கள் திடீரென்று எக்காரியத்திலும் பிரவேசித்துவிடக்கூடாது. விஷயங்களை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். தங்கள் எண்ணங்களுக்கும், செய்கைகளுக்கும் அனுபவ பலன் என்ன? அது எப்படிப்பட்டது? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப்பார்த்து சரித்திரங்களையும், சம்பவங்களையும் அறிந்தே ஒரு துறையில் இறங்கவேண்டும்.

இளைஞர்கள் முதலில் சமூக வாழ்விலுள்ள கஷ்டங்களை ஒழிக்கப்பாடுபட வேண்டும். திடீரென்று அரசியலில் குதிக்கவேண்டியதில்லை. ஏனெனில் அரசியல் என்பது சூதாட்டம் போன்ற காரியமானதால் இளைஞர்கள் சுலபத்தில் ஏமாந்து போகக்கூடும். அதைப் பெரியவர்களுக்கு விட்டு விட்டு மனித வாழ்க்கையைச் சுலபமாகவும், சௌக்கியமாகவும் இருக்கும்படி பார்க்கவேண்டும். இந்தப் பலனால் தான் ஒரு தேசத்தின்—சமூகத்தின் பெருமை இருக்கின்றதே ஒழிய அரசியலிலேயே இருப்பதாகச் சொல்ல முடியாது.

நிற்க, சீர்திருத்தத் துறையில் நான் பெரிய மாறுதல் செய்திருப்பதாகப் புகழுகிறீர்கள்.

சீர்திருத்தம் என்பது ஒரு பிரமாதமான காரியமல்ல. மக்கள் தாங்கள் இருக்கும் நிலையிலிருந்து முற்போக்கடைய எண்ணுவதும், மாறுதல் அடைய ஆசைப்படுவதும் இயற்கையேயாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மனிதனும் அவனவன் வாழ்வில் முற்போக்கும், மாறுதலும் அடைந்துகொண்டே வருகிறான். இதற்காகத் தனி லட்சியம் தேவையில்லை. மரக்கட்டை போல் உணர்ச்சியற்றவனாயிருந்தாலும் அவன்கூட காலப்போக்கில் தானாகவே மாறுதலும், முற்போக்கும் அடைந்துதான் தீருவான்.

ஆனால் அப்படிப்பட்ட விஷயங்களில் நம்போன்றவர்கள் செய்யும் விசேஷ காரியம் என்னவென்றால் எப்படிப்பட்ட மாறுதல் எப்படிப்பட்ட முற்போக்கு அவசியம் என்பதில் செலுத்தும் கவனமேயாகும்.

தானாகப் போய்க்கொண்டிருக்கும் முற்போக்குக்கும், மாறுதலுக்கும் தடையாயிருந்து அவற்றை வேறு வழியில் திருப்புவதினால் சில சமயங்களில் பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டு விடுகின்றது. அதற்கு எதிர்ப்பும், பழிப்பும் பலமாய் ஏற்பட்டு விடுகின்றது. இப்படிப்பட்ட சமயங்களில் சிலர் பழமையை—ஏதாஸ்திதியை குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு உபத்திரவப்படுகிறார்கள். தொல்லைகளை விளைவிக்கிறார்கள். இத்தொல்லையும் உபத்திரவமும் தங்கள் அறியாமையால் செய்வதும் உண்டு. சிலர் தங்கள் சுயநலங்களுக்கு ஹானி ஏற்படுமே என்ற கெட்ட எண்ணத்தின்மீது செய்வதும் உண்டு.

எப்படி இருந்தாலும் அபாயமான வழியில்—கெடுதி உண்டாக்கும் வழியில் மாறுதலும், முற்போக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மக்கள் கடமையாகும். மாறுதல் வரும்போது அதைக்கையாளுபவர்கள் துன்பத்துக்கும், பழிப்புக்கும் ஆளாவது என்பது புதிதல்ல. சரித்திர கால இயற்கையாகும். சாக்ரடீஸ், புத்தர், கிறிஸ்து, மகம்மது ஆகிய பெரியார்கள் இன்று எவ்வளவோ மக்களின் வணக்கத்துக்கும், மதிப்புக்கும் உரியவர்களானாலும் அவர்கள் காலத்தில் எவ்வளவோ தொல்லைக்கும், இழிவுக்கும், பழிப்புக்கும் ஆளானதாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.

அதுபோலவே சில மாறுதல்கள் தற்கால மக்களுக்குக் கசப்பாயிருந்தாலும் பிற்கால மக்களால் மதிப்பும், பெருமையும் பெறும் என்ற துணிவு எனக்குண்டு. அந்த நம்பிக்கையின் பேரில்தான் நாம் எந்த மாறுதலையும், திருத்தத்தையும் செய்யத் துணிய வேண்டுமே ஒழிய நாம் இன்றே பாராட்டப்பட வேண்டும் என்று கருதிக்கொண்டு செய்வது பயன்படாது.

கல்யாணம், இழவு, வாழ்வு முதலிய துறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கம்தான் என்று இங்கு பேசியவர்கள் சொன்னார்கள். அதை முழுவதையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. கால தேச வர்த்தமானம் மக்களை அப்படிச் செய்யச்செய்கின்றது. அதில் சிலவற்றிற்கு சு. ம. இயக்கம் துணை புரிந்தது என்று சொல்லலாம்.

குறிப்பாக மனித சமூகத்தில் பெண்கள் விஷயத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட வேண்டியது அவசியம். இது தீண்டாமையை ஒழிப்பதைவிட அவசரமாய்ச் செய்யவேண்டிய காரியம் என்பது எனது அபிப்பிராயம். அதிலும் விதவைக்கொடுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். அது மனித தர்மத்துக்குமாத்திரமல்லாமல் ஜீவதர்மத்துக்கே விரோதமானதாகும். விதவைகளைப்பற்றி நினைக்கும்போது எனக்கு ராஜாராம் மோகனராயைப்பற்றித்தான் ஞாபகம் வருகின்றது. இன்றைய விதவைகளின் கொடுமைக்கு அவர்தான் காரணம் என்று சொல்லவேண்டியிருப்பதற்கு வருந்துகிறேன்.

ஏனெனில் இந்து சாஸ்திர முறைப்படி புருஷன் இறந்தவுடன் பெண்ஜாதியை கட்டையில் பலாத்காரமாயாவது வைத்து புருஷனுடன் கட்டி நெருப்பை வைத்து சுட்டுவிடும் முறை இன்றும் இருக்குமானால் இன்று உலகில் விதவைகளே இருக்கமாட்டார்கள், விதவைக் கொடுமையும் இருக்காது.

விதவைகளை சுடக்கூடாது என்று சொன்னவர் அவ்விதவைகளுக்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதில்லாமல் இன்று இந்தியாவில் மாத்திரம் குழந்தைகள் உட்படபெண்களில் 100-க்கு 25 பேர் விதவைகளாய் இருக்கிறார்கள் என்றால் இது கொடுமையா அல்லவா? இதை ஒழிப்பதைவிட வேறு ஜீவகாருண்ய வேலையோ, சீர்திருத்த வேலையோ இருக்கின்றதா என்று கேட்கின்றேன். அதுபோலவே பெண்கள் சுதந்திரவிஷயமும் மோ

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

பகுத்தறிவு.

ராடு 1934- அக்டோபர் 14-௳

## ஸ்தல ஸ்தாபனச் சீர்கேடு.

ஸ்தலஸ் தாபனங்கள் என்றுசொல்லப்படும் ஜில்லா, தாலூக்காபோர்டுகள், முனிசிபாலிட்டி, யூனியன், கிராம பஞ்சாயத்து ஆகிய ஸ்தாபனங்களைப் பற்றி நம்முடைய அபிப்பிராயம் யாவரும் அறிந்ததேயாகும்.

இவைகளைப்பற்றிசுமார் 20, 25 வருஷ காலமாகவே நமக்குநேரிட்ட அனுபோகம் உண்டு என்பதையும், அதன்பயனுவே ஸ்தலஸ்தாபனங்களில் ஜனப்பிரதிநிதிகள்என்பவர்களுக்குள்ள அதிகாரங்களையும் அரசாங்கம் திரும்பப்பெற்றுக்கொண்டு பொறுப்புள்ள சம்பள ஆட்களிடம் அவைகளை ஒப்புவிக்கவேண்டுமென்றும் பேசியும், எழுதியும் வந்ததோடு இப்போதும் அதுபோலவே பல காரியங்கள் நடந்தும் வந்திருக்கின்றன.

தாலூகா போர்டுகள் எடுபட்டு விட்டன. முனிசிபாலிட்டிகளில் சேர்மென்களின் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு அவர்களை நகரும் யந்திரங்களாக ஆக்கப்பட்டு விட்டன. சட்டத்தில் சேர்மென் என்று இருந்த இடங்களிலெல்லாம் கமிஷனர் என்று போட்டாய் விட்டது. சில கமிஷனர்கள் யோக்கியப்பொறுப்பற்றவர்களாயிருக்கலாம். சிலசமயங்களில் தவறுதல்கள் செய்தும்விடலாமென்று வைத்துக் கொண்டாலும் 10 கமிஷனர்களின் யோக்கியப் பொறுப்பற்ற தன்மையும், 10 கமிஷனர்களின் ஒழுங்குத்தவறுதலான காரியங்களும் ஒன்று சேர்ந்தாலும் ஒரு சேர்மெனின் யோக்கியப்பொறுப்பற்ற தன்மைக்கும், ஒரு சேர்மனின் ஒழுங்குக் தவறுதலான காரியங்களுக்கும் இணையாகாதென்பது இன்னமும், இன்றும் நமது அபிப்பிராயமாகும்.

ஒரு முனிசிபாலிட்டி சிப்பந்திகள் 32 கௌன்சிலர்களுக்கும், ஒரு சேர்மெனுக்கும் அடிமையாயிருந்து தவறுதல் செய்வதைவிட ஒரு ஸ்பெஷலாபீசருக்கு அடிமையாயிருந்து தவறுதல் செய்துவிடுவதால் முனிசிபல் நிர்வாகம் அதிகமாய்க்கெட்டுவிடாது என்றுதான் சொல்வோம்.

அதுபோலவே ஒரு சேர்மெனும், 19 கவுன்சிலர்களும் சேர்ந்து கொள்ளை அடிப்பதின் மூலம் ஒரு முனிசிபாலிட்டியின் சொத்து கொள்ளை போவதைவிட ஒரு ஸ்பெஷல் ஆபீசர் கொள்ளை அடிப்பதில் முனிசிபல் சொத்து அதிகம் கொள்ளை போய்விடாது என்றே சொல்லுவோம். கமிஷனர்கள் புதியவர்களானதாலும் சிலருக்கு அவர்களது தகுதிக்கு மேற்பட்ட அதிகாரம் வகித்துப் பழக்கமில்லாததாலும்சில தவறுதல்கள் தற்காலம் ஏற்படக்கூடும். என்றாலும் பொதுநோக்குடைய கவுன்சிலர்களும், சேர்மென்களும் அவர்களைத்திருத்தி ஒழுங்கானமுறையில் நடத்தி ஸ்பெஷல் ஆபீசர்களின் தன்மையை வெற்றிபெற உதவி செய்வது கடமையாகும். "ஸ்பெஷல் ஆபீசர்களுடன் கலகங்கள் ஏற்படுமாகில் கவுன்சிலுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச அதிகாரமும் பறிக்கப்பட்டு விடுமேயொழிய ஸ்பெஷல் ஆபீசர்கள் பதவி குறைந்தது இன்னம் 10, 15 வருஷ காலங்களுக்கு மாற்றப்பட முடியாது என்று கூறுவோம்.

இது நிற்க இன்றைய ஜில்லா போர்டுகளின் யோக்கியதைகளைப் பற்றி சிலது குறிப்பிட வேண்டியது அவசியமாய்ப் போய்விட்டதற்கு வருந்துகிறோம்.

முனிசிபாலிட்டிகளின் நிருவாகம், ஆயிரக்கணக்கில் ஒன்று இரண்டு லக்ஷக்கணக்கில் ரூபாய்களை வரும்படியாகக் கொண்டது. ஜில்லா போர்டுகள் அப்படிக்கில்லாமல் 10 லக்ஷம் 20 லக்ஷம் கணக்கில் ரூபாய்களை வரவு செலவுகளைக் கொண்டவைகளாகும்.

தாலூகா போர்டை எடுத்து விட்டு முனிசிபாலிட்டிகளுக்குக் கமிஷனர்களை நியமித்த அரசாங்கம் புத்திசாலித் தனமுடையதாய் இருந்தால் முதல் முதல் ஜில்லாபோர்டுகளை எடுத்திருக்க வேண்டும். அல்லது அவைகளுக்குக் கமிஷனர்களைப்போட்டிருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஜில்லா போர்டுகளில் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் பாழாக இடம் தாராளமாய் விட்டு விட்டு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குப் பாதுகாப்பளித்திருப்பது எருமை போவது தெரியாமல் விட்டு விட்டு எறும்பு போவதைக்கண்டு பிடித்த வீரனுக்கே ஒப்பாகும்.

ஜில்லாபோர்டு தேர்தல் காலங்களில் நாம் முரசடிப்பது போல் கூப்பாடு போட்டோம். ஜில்லா போர்டு மெம்பர் ஸ்தானங்களுக்கு 5000, 10000 செலவு செய்கிறார்கள் என்றும், பிரசிடெண்டு ஸ்தானங்களுக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம், 75 ஆயிரம் ரூபாய்கள் கூட செலவு செய்கிறார்கள் என்றும் கூப்பாடுபோட்டோம். இதை அறிந்த அரசாங்கத்தார் இப்படிச் செலவு செய்கின்றவர்களைப் பயித்தியக்காரர்கள் என்று நினைத்து "அவர்கள் செலவு செய்தால் நமக்கென்ன" என்று இருந்துவிட்டார்கள். இருந்தும் வருகிறார்கள்.

இப்படி நினைத்ததுசுத்தவடிகட்டின முட்டாள் தனம் என்பதை சர்க்காருக்கு சில ஜில்லாபோர்டுகள் நன்றாய் அறிவுறுத்தி விட்டதென்றாலும் சர்க்கார் தெரியாதது போல் கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கின்றது.

இன்று சென்னை மாகாணத்தில் 100-க்கு 75 ஜில்லாபோர்டு கண்ட்ராக்டுகள் ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளுக்கும், மெம்பர்களுக்கும், அவர்கள் சிப்பந்திகளுக்கும், சொந்தக்காரர்கள் பேராலும், சினேகிதர்கள் பேராலும் இருந்து வருவது உலகமறிந்த ரகசியமாகும். பல கண்ட்ராக்டுகள் லக்ஷம், ஐம்பதினாயிரம்ரூபாய்கள் எஸ்டிமேட்டுகள் உள்ளது 100க்கு 10 விகிதமும் 15 விகிதமும் குறைவாய் டெண்டர்கள் கொடுத்திருந்தும், அவர்கள் பெரிதும் பரம்பரை அனுபோகம் பெற்ற கண்ட்ராக்ட்டர்களாய் இருந்தும், பணப்பொறுப்புள்ளவர்களாய் இருந்தும், அப்படிப்பட்டவர்களுக்குக் கண்ட்ராக்ட்டு கொடுக்கப்படாமல் புதுக் கண்ட்ராக்ட்தாரர்களுக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலைக்காரரின் சொந்தக்காரர்களுக்கு மெம்பர்வேலைக்காரர்களின் சொந்தக்காரர்களுக்கு பொருளாதார நிலைமையில்திருப்தி யில்லாதவர்களுக்கு எஸ்டிமேட் தொகைக்கு மேல் 100க்கு 10, 15ரூபாய் வீதம் அதிகம் சேர்த்துக் கண்ட்ராக்ட் கொடுக்கப்படுகிறதென்றால் இதற்கு என்ன பேரிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தப்பணங்களை யார் அடைந்தார்கள்? இதை மெம்பர்கள், பிரசிடெண்டுகள் அடைந்தார்களா? என்பது விவகாரத்துக்கு இடமாயிருந்தாலும், ஒரு சமயம் ருஜுவிட முடியாததாய் இருந்தாலும், இந்தப் பணங்கள் ஜில்லாபோர்டுக்கு நஷ்டமாகிவிட்டதென்றுசொல்வதில் ஏதாவது விவகாரமோ, ருஜுச் செய்ய வேண்டிய பொறுப்போ இருக்கின்றதா என்று கேட்கின்றோம்.

மதுரை ஜில்லாபோர்டைப் பற்றி மெம்பர்கள் பெரியதொரு மகஜர் அனுப்பினார்கள். பல ஊழல்களை எடுத்துக் காட்டினார்கள். கடைசியாக ஒன்றும் செய்ய முடியவில்லை. கவர்ன்மெண்டும் இனிமேல் அப்படி வேறு பிரசிடெண்டுகள் நடக்கக் கூடாமல் இருக்கும்படி செய்யவுமில்லை. மற்றும் சில ஸ்தலஸ்தாபன விஷயங்களில் கைப் பிடிப்பாய்ப் பிடித்துக் கொடுத்தார்கள். அதற்கும் ஒன்றும் செய்யவில்லை.

திருச்சி முனிசிபாலிட்டியில் கவுன்சிலர்கள் கையாடினார்கள் என்றோ, சேர்மென் கையாடினாரென்றோ கண்டுபிடிக்கவும் இல்லை. முனிசிபல்பணம் இம்மாதிரி ஏதாவது சந்தேகத்துக்கு இடமாயாவது வீணாக்கப்பட்டதா என்றும் தீர்ப்புக் கூறவுமில்லை. ஏதோ சர்க்கார் மரியாதையைக் காப்பாற்ற வேண்டியென்று அடியோடு கலைக்கப்பட்டு விட்டது அதைப் பற்றி நாம் பரிதாபங்கூடக் காட்ட வரவில்லை. இன்னும் கடின முறை எடுத்துக்கொண்டாலும் சரி. எடுத்துக் கொள்ள வேண்டியதும் அவசியம் தான் என்று கூடச் சொல்லுவோம். ஆனால் அதைவிட மோசமான ஸ்தல ஸ்தாபனங்களை ஏன் விட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்பதுதான் நமது கேள்வி.

ஆடிட்டர்கள் ரிபோர்டுகளின் மீது கடினமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மேல்கண்ட மாதிரி 10, 15 பெர்சண்டு கம்மியாய் கேட்ட கண்ட்ராக்டுகளை 10, 15 பெர்செண்டு அதிகம் கூட்டி அதாவது 100க்கு 30 ரூபாய் பிரத்தியார் கேட்டதற்கு மேல் அதிகம் கூட்டிக்கொடுக்கும் கண்ட்ராக்டுகளைப் பற்றி இஞ்சினீயர்கள் ஏன்கவர்ன்மெண்டுககுத்தெரியப்படுத்தாமலும்உள் உளவாயும் இருந்தார்கள் என்பதைப்பற்றி இஞ்சினீயர்கள் மீது நடவடிக்கை நடத்தவும் தக்க பொறுப்புகள் இருக்கும்படி செய்யவும்வேண்டும்.

ஸ்தலஸ்தாபன சுயாட்சி யென்று பேர் வைத்துச் சில அதிகாரங்கள் கொடுத்து அதை இந்தப் படி கேவலமாகவும், பண நஷ்டமாகவும், கையாடுதல் செய்யவும் முதலிய காரியங்களுக்கும் தலைமறைவாய் இடம்கொடுத்து அதற்காக ஊரில் உள்ள பணக்காரர்களை யெல்லாம் வியாபாரம்

போல்போட்டிபோட விட்டுக் கக்ஷி பிரதி கக்ஷிகள் ஏற்பட்டு இதன் பயனைச் சர்க்கார் முறையைத் திருத்த எவரையும் நெருக்க லாயக்கில்லாமல் ஆக்குவதில் குடிகளுக்கு என்ன லாபமென்று கேட்கின்றோம்.

பொப்பிலிராஜா சர்க்கார் நாணயமானது, கண்டிப்பானது என்பதில் நமக்கு இதுவரை சந்தேகம் கூட ஏற்பட்டதில்லை.

ஆகையால் ஸ்தலஸ்தாபனவிஷயத்தில் இது சமயம் நமது நாட்டிலிருந்து வரும் ஊழல்களை யொழிக்க ஜர்மன் ஹிட்லரைப்போல் சிறிது ஹிட்லரிசத்தைப் பயன்படுத்தினாலல்லது முடியாதென்றே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எது எப்படியிருந்தாலும் இந்த வருஷக் கடைசிக்குள்ளாகவாவது ஜில்லாபோர்டுகளுக்கும் கமிஷனர்களை நியமித்து விடுவது அனேக ஜில்லா போர்டுகளுக்கு லக்ஷக் கணக்கில் ரூபாய்கள் லாபமென்று நினைக்கின்றோம். தாலூக்கா போர்டுகளை யெடுத்து விட்டதின் பயனும் ஏதாவது நன்மையேற்படக் கூடுமென்றிருந்து வந்த எண்ணம் கனவாகி தாலூக்கா போர்டு தவறுதல்களும் சேர்ந்து ஜில்லா போர்டுகளில் நடந்து வருவதாயிருக்கிறது. ஆதலால், இப்போது நமக்குத் தோன்றுவதென்ன வென்றால் இந்திய மக்கள் இன்னம் கொஞ்ச காலத்துக்காவது "சுயாட்சி"க்கு லாயக்கில்லை யென்று முடிவுசெய்து விட்டு இப்போது இரண்டு தாலூக்காக்களை ஒரு ரிவினியூ டிவிஷனுக்கு அவற்றிற்கு ஒவ்வொரு ரிவினியூ டிவிஷனல் ஆபீசர் (டிப்டி கலெக்டர்கள்) போட்டிருப்பதை மாற்றி ஒருதாலூக்காவுக்கு ஒரு டிப்டி கலெக்டர் வீதம் போட்டு அவர்கள் வசமே இந்த முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து, தாலூக்கா ஜில்லா போர்டு இலாக்காக்களை விட்டு விடுவது மேலென்று தோன்றுகின்றது. இதனால் சர்க்காருக்கு லாபமிருக்காதென்றாலும் ஏழை மக்களுக்கும், வரிப்பணங்களுக்கும் இப்போது இருப்பதைவிடப்பலமடங்கு நன்மையும், லாபமும் உண்டென்று சொல்லுவோம். குறைந்த அளவு ஒரு ஜில்லாவில் பரீக்ஷார்த்தமாய் ஒரு மூன்று வருஷ காலத்துக்காவது செய்து பார்த்தால் போதுமென்றுகூடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

## "ஷண்முகத்தின் அஹம்பாவம்"

தோழர் ஷண்முகம் அவர்கள் தனது தேர்தல் சம்மந்தமாய் ஆங்காங்கு பிரசங்கம் செய்து வருவது யாவரும் அறிந்தததாகும். அவருடைய எதிரிகளாகிய காங்கிரஸ்காரர்கள்—தேசிய பத்திரிகைக்காரர்கள்—பார்ப்பனர் ஆகியவர்கள் ஷண்முகத்தை வைவதற்கும், அவர் மீது பழிசுமத்தி விஷமப்பிரசாரம்செய்வதற்கும் ஆட்டவா ஒப்பந்தத்தையும், சட்டசபைத்தலைவர் பதவியில் "அவர்வில்லின்டன்பிரபுவுக்கு அடிமையாய் இருந்தார்" என்றும், இனியும் அடிமையாய் இருக்கப் போகிறார் என்றும், காங்கிரசுக்கு துரோகிஎன்றும் வியாபாரிகளுக்கு துரோகி என்றும் சொல்லி அவற்றைப் பல்லவியாய் வைத்து எதிர்ப்பிரசாரம் செய்து வந்தார்கள். இவற்றிற்கெல்லாம் தக்கபதில் சொல்லப்பட்டவுடன் இப்போது அந்தப் பல்லவிகளை உபயோகிக்க முடியாமல் போய் விட்டதால் ஷண்முகம், பிரசங்கத்தில் "அப்படிச் சொன்னார்." "இப்படிச் சொன்னார்." "இது அகம்பாவம்" "இது தலைவர்க்கழகல்ல" "இப்படிப்பட்டவர் தலைவராகக்கூடாது." "இவர் தெரிந்தெடுக்கப்பட்டால் எப்படியும் தலைவராகி விடுவார். ஆதலால் தெரிந்தெடுக்கக்கூடாது" என்று புதிய முறையில் இப்போது விஷமப்பிரசாரம் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் உள்ள காங்கிரஸ்வாதிகள் அனேகர் தேசிய பத்திரிகைக்காரர்கள், காங்கிரஸ் பத்திரிகைக்காரர்கள் ஆகியவர்கள் பெரிதும் யோக்கியப் பொறுப்பு, நடுநிலைமை என்கின்ற விஷயங்களை சுயநலத்துக்கு தியாகம் செய்தவீரர்களாக இருப்பதாலும்அதோடு மானபிமானத்தையும்வந்த விலைக்கு விற்கத்துணிந்திருப்பதாலும் அவர்களுக்கு உண்மை, ஒழுங்கு, மனிதத்தன்மை என்பவைகள் கண்களுக்கே தென்படாமல் போய் விடுகின்றன. அப்படிக்கில்லாமலிருந்தால் தோழர் ஷண்முகம் என்ன பேசினார்? ஏன் பேசினார்? என்பவைகளையும் முழுவதும் எடுத்துச் சொல்லி மேல் கொண்டுதங்கள் காரியங்களை நடத்தி இருக்கலாம் அவற்றை விட்டுவிட்டு எங்கோ இரண்டொரு வார்த்தைகளைப் பொருக்கிக்கொண்டு அதை ஆதியாய் வைத்து வெறிகொண்டவர்களைப் போல கண்டபடி உளரிக்கொட்டி வருகின்றனர். இதன் பயனாய் காங்கிரஸ்காரர்கள் யோக்கியதையும், தேசியப் பத்திரிக்கைகளின் யோக்கியதையும் உலகமறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதே ஒழிய, சர் ஷண்முகத்தை சிறிதாவது அசைக்க முடிந்தது என்று சொல்லி விட முடியவில்லை.

ஷண்முகம் அசம்பளிக்கு பிரசிடெண்டாக இருந்ததால் அவரை பிரசிடெண்ட் என்று மதித்தவர்கள், அல்லது அவரை பிரசிடெண்டு முறையில் குறை கூறுகிறவர்கள் யோக்கியர்களாய் இருந்தால் அவருக்குப் போட்டி போட்டிருக்கக் கூடாது, அல்லது பிரசிடெண்டாய் இருந்தபோது அவர் செய்த குற்றம் ஏதாவது இருந்தால் அதை மரியாதையுடன் எடுத்துக்காட்ட இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் "ஷண்முகம் பிரசிடெண்டாய் இருந்தாலும் அவருக்கு போட்டி போடக் கூடாது என்கின்ற ஒழுங்கை அடிமை தேசத்திலுள்ள அடிமை மக்கள் பின் பற்ற முடியாது" என்றும் "காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் இல்லாத காலத்தில் அவர் பிரசிடெண்ட் ஆனதினால் அவருக்கு காங்கிரஸ்காரர்கள் பிரசிடெண்ட் யோக்கியதையை கொடுக்க முடியாது" என்றும் சொல்லி அவரை ஒரு சாதாரண மனிதனாகவே கருதி போட்டி போட்டுக் கண்டபடி மேடைகளில் ஏறி காலிகள் முதல், சத்தியாக்கிரகிகள் என்கின்றவர்கள் வரை பூதக் கண்ணாடி வைத்துக்கண்டுபிடிப்பதற்குக்கூட உண்மையோ, யோக்கியதையோ இல்லாமல் பேசி, எழுதி விஷமப்பிரசாரம் செய்தால் தோழர் ஷண்முகம் தனது வாய்க்குப் பூட்டுப்போட்டுக் கொள்ள வேண்டுமென்று எங்தப் பயங்காளியாவது சொல்ல முன் வருவானா என்று கேட்கின்றோம்.

எதிர் பிரசாரத்தின் யோக்கியதையைப் பற்றிச் சொல்ல ஒன்று இரண்டு விஷயங்களே போதுமென்று நினைக்கின்றோம்.

முதலாவது அவரை செக்கு ஓட்டுகிற மாதிரியாகப் படம் போட்டு அதற்கு சிறிதுகூடப் பொருத்தமில்லாத விஷயத்தைச்சொல்லி அற்பத்தனமாய், போக்கிரித்தனப்பிரசாரம் செய்தார்கள்.

இரண்டாவது அதை விட இழிவான முறையில் "தோழர் ஷண்முகம் தனது தொகுதியை விட்டு பயந்துகொண்டு ஓடி விட்டார்" என்று கேவலப்பிரசாரம் செய்தார்கள்.

மூன்றாவது 'அவர் சட்டசபைக்குப் போனால் பிரசிடெண்டாகி விடுவார். பிரசிடெண்டானால் வைசிராய் பிரபுவுக்கு அடிமையாகி விடுவார். ஆதலால் அவருக்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது" என்று விஷமப் பிரசாரம் செய்தார்கள்.

இவைகள் தவிர "அப்படிக் கெடுதி செய்து தேசத்தைக் காட்டிக்கொடுத்தார்" "இப்படிக் கெடுதி செய்து தேசத்துரோகியானார்" என்றும் பிரசாரம் செய்தார்கள்.

இவ்வளவு காரியங்கள் நடந்த பிறகு தோழர் ஷண்முகம் மேடை யேறாமல் இருக்க முடியுமா என்று பார்லிமெண்டு ஒழுங்கு தெரிந்த மேதாவிகளைக்கேட்கின்றோம்.

ஆண்மையோடு, வீரத்தோடு போர்புரிபவர்களே யுத்த முறையைப் பற்றிப் பேச யோக்கியதை உடையவர்களாவார்கள். சண்டித்தனமான போர் முறையில் யுத்த முறையைப் பற்றிப் பேசுவது தோல்வியை ஒப்புக் கொண்டதாகுமே ஒழிய வேறில்லை.

ஷண்முகத்தை இந்தப் பார்ப்பனர்கள் வம்புக்கிழுக்கிறார்களா? அல்லது அவரே வம்புக்குவந்தாரா? என்பதைப் பொதுஜனங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

வேட்டைக்குப் போன ஒரு வேடன் ஒரு மிருகத்தைச்சுடக் குறிபார்க்கிறபோது அந்த மிருகம்வேடனைப் பாய வந்தால் வேடன் "ஐயோ மிருகம் பாய வருகிறதே" என்று அதன் மீது பழி கூறுவது எவ்வளவு நியாயமும், வீரமும் ஆகுமோ அது போல் சும்மா இருக்கும் ஷண்முகத்தை வம்புக்கிழுத்து விட்டு

விட்டு "ஐயோ ஷண்முகம் இப்படிப் பேசினாரே! அப்படி ஏசினாரே!! அவர் அகம்பாவம் எவ்வளவு" என்று பேசுவதில் ஆண்மை எங்கே, வீரம் எங்கே, நீதி எங்கே, உண்மை எங்கே என்று கேட்கின்றோம்.

"ஷண்முகம் ஒரு பதவியில் இருப்பவர், அவர் பெரிய மனிதர், ஆதலால் இப்படிப் பேசக்கூடாது" என்று தர்ம உபதேசம் செய்கிறார்கள் சிலர். சிறிதும் வெட்கமில்லாமல் ஷண்முகம் பெரிய மனிதர், இவர்கள் அது அல்லாதவர்கள், ஆதலால் இவர்கள் என்ன பேசினாலும் அவர் ஒன்றும் பேசக்கூடாது என்பதை இவர்களே ஒப்புக்கொள்வது போல் தான் ஆகின்றது.

"நாய் கடித்தால் நாயைத் திருப்பிக் கடிக்கக் கூடாது" என்பது சரியான நீதிவாக்கியந்தான். ஆனால் அதை அடிக்காமல் இருக்க முடியுமா என்றுதான் கேட்கின்றோம்.

காங்கிரஸ் துரோகி, தேசத் துரோகி என்று சொன்ன பிறகே அவர், தான் துரோகி அல்ல என்று பதில் சொல்லவந்தால் எலக்ஷன் போட்டியில் அவர் அஹம்பாவமாய் பேசினார் என்று சொல்லுவது அர்த்தமற்ற வார்த்தையே ஆகும்.

இப்போதும் அவர் அதே வார்த்தையைத்தான் சொல்லுகிறார். "காங்கிரஸ்காரர்கள் என்னை எவ்வளவு தேசத் துரோகி என்று சொல்லி விஷமப்பிரசாரம் செய்தாலும், நான் வெற்றிபெறத்தான் போகின்றேன். பொது ஜனங்களுக்குச் சொந்த புத்தி உண்டு. ஆதலால் அதோடு மாத்திரமல்ல நான் இந்திய சட்டசபைத் தலைவருமாகத்தான் போகின்றேன்" என்று சொல்லுகின்றார். அதில் என்ன தப்பு? அதற்காக அவரை என்ன செய்ய முடியும்? என்றுதான் கேட்கின்றோம்.

இந்த வார்த்தைக்கு அஹம்பாவம் காரணமா? அல்லது அவரைத் தெரிந்தெடுக்கப்போகும் ஓட்டர்களின் ஞானமும், வாக்குறுதியும், நாணயமும் காரணமா என்று கேட்கின்றோம்.

தோழர் பனகால் அவர்கள் தேர்ந்தெடுக்கப் படக்கூடாது என்று எப்படி எல்லாப் பார்ப்பனர்களும் டிங்-டங்-டாங் என்று சுதேசமித்திரன் முதல்கொண்டு தோழர்கள் சீனிவாசஐயங்கார், அல்லாடி ஐய்யர், சி. பி. ராமசாமிஐயர்முதல்கொண்டு ஆகாயத்துக்கும், பூமிக்குமாக குதித்தார்களோ அது போலவே இப்போதும் சர். ஷண்முகம் வெற்றிபெறக்கூடாதென்று அந்த அண்ணாத்தைகள் உள்பட "மகாத்மாக்களை" உபயோகித்துக் கொள்வது உள்பட காரியங்கள் நடக்கின்றன. நடந்தால் நடக்கட்டும் என்றே தான் சொல்லுகின்றோமே ஒழிய இதற்குப் பயப்படவில்லை. ஷண்முகம் தோற்றுவிட்டாலும் முழுகிப்போவது ஒன்றும் இல்லை. மேலால் நடக்கப்போவது என்ன என்று தான்கேட்கின்றோம்.

1926ல் ஜஸ்டிஸ்கட்சி தோற்றுப்போனதுதான் மந்திரிசபையிலும், நிர்வாகசபையிலும் பார்ப்பனப் பூண்டுக்கு இடமில்லாமல் போனதற்குக்காரணமாய் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை.

பார்ப்பனரல்லாதாருக்கு அவர்கள் விகிதாச்சாரத்துக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூட கொடுக்கக்கூடாது என்று சொல்லி மிரட்டியதின் மூலமாய் ஏமாற்றிய காரணம் தான் இன்று பார்ப்பனர்களைத் தங்கள் வகுப்புக்குத் தகுந்தபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கச்செய்ததும் சில இடங்களில் அடியோடு இல்லாமல் போக நேரிட்டதுமாகும்.

அதுபோலவே ஷண்முகத்தின் விஷயமும் (தோல்வி ஏற்படாது) ஏற்பட்டாலும் அது ஒரு சமயம் ஷண்முகத்தின் சுய நலத்துக்கு விரோதமாகலாமாயினும் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு இரட்டைலாபம் என்பதோடு பார்ப்பனர் நிலைமை கடுகளவு கூட முற்போக்கடையக்கூடியதாய் இராது என்பதையும் நிச்சயமாய்ச் சொல்லுவோம். ஆகையால் இன்றையபார்ப்பனர்களால் பிறர்கண்டு பிடிக்க முடியாமலும், தோல்வி அடையாமலும் இருக்கும் படியாக எவ்வித பித்தலாட்டமும், விஷமப் பிரசாரமும் செய்ய முடியாது என்பதும், அந்தக்காலம் மலையேறி விட்டதுஎன்பதும் நமது அபிப்பிராயமாகும்.

---

# வெள்ளியங்கிரிக் கவுண்டர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமாம்.

## கோவை ஜில்லாபோர்ட் நிர்வாக ஊழலைப்பற்றி 30 அங்கத்தினர்கள் சர்க்காருக்கு விண்ணப்பம்.

(நமது நிருபர் தந்தி)

கோவை, அக்டோபர் 13.

கோவை ஜில்லா போர்டு தலைவர் கனம் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் நிருவாகத்தில் சில மறுக்கவொண்ணாத ஒழுங்கீனங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டு கோவை ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் (இருபட்டக்காரர்களும், ஜமீன்தார்களும் உள்பட) 30 பேர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்றை அரசாங்கத்தாருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அதன் மீது விசாரணை நடைபெறுகிறது. அத்துடன் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவரப்படுவதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

---

# சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி மூவர் அபிப்பிராயங்கள்.

## வருணாச்சிரமி.

வருணாச்சிரம தர்மக் காப்பாளரான தோழர் ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சென்ற மாதத்தில் மாயவரம் முனிசிபல் கவுன்சிலர் தோழர் சேவியர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் சுயமரியாதைக்காரர்களைப்பற்றி குறிப்பிட்டிருப்பதாவது:—

"எனக்கும், சுயமரியாதைக்காரர்களுக்கும்அனேக விஷயங்களில் ஒற்றுமை இல்லையானாலும் எனக்கு அவர்களிடம் உள்ள மரியாதை குறையவில்லை. அவர்கள்சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியா விட்டாலும், அவர்கள் நாணயமாக நடந்து கொள்ளுகிறார்கள். அவர்களிடம் ஒளிமறைவுகிடையாது."

என்று எழுதிவிட்டு காங்கிரஸ்காரர்களைப்பற்றி எழுதியிருப்பதாவது:—

"காங்கிரஸ், ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் சில மனிதரிடம் அகப்பட்ட தனிக்கூடமாகி விட்டது. அதைக் கைப்பற்றியிருக்கும் மனிதர்கள் காங்கிரஸின் பழைய பெயரால் பிழைத்து வருகிறவர்கள். கற்றுக்குட்டிகளும், சுயநல சூழ்ச்சிக்காரரும் அதைக் கைப்பற்றி தங்கள் சொந்த நன்மைகளைச் சம்பாதிக்க உபயோகப்படுத்தி வருகிறார்கள்." (சு—ச)

## காங்கிரஸ்.

தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் எழுதியது.

"சுயமரியாதைக்காரர்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறவர்களுக்குத் தான் அதிக தெய்வபக்தி இருக்கிறது. அவர்களை நாம் வரவேற்கவேண்டும்."

(கோவை தமிழர் மகாநாட்டுத் தலைமை உபந்யாசம்.)

## ஜஸ்டிஸ்.

ஜஸ்டிஸ் கட்சித்தலைவரும், சென்னை அரசாங்க முதல் மந்திரியுமான பொப்பிலி ராஜா எழுதியது.

சுயமரியாதை இயக்கத்தின் மீது பழிகள் சுமத்துகின்றவர்கள் அவ்வியக்கத்தின் உண்மைத் தத்துவங்களை உணராதவர்களாவார்கள். அதில் எவ்வித பழிகளுக்கும் ஒரு சிறிதும் ஆதாரம் கிடையாது. எனக்குத் தெரிந்த வரை சுயமரியாதை இயக்கம் பல பெருங்கொள்கைகளைத் தழுவி நிற்கின்றது."

(ஜஸ்டிஸ் மகாநாட்டுத் தலைவர் பொப்பிலி ராஜா உபந்யாசம்)



தோழர் பி. டி. குமாரசாமி செட்டியார்
சென்ற மாதம் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய நலவுரிமைச்சங்க மகாகாட்டு வரவேற்புக் கழகத்தலைவர்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சமாகவே இருக்கின்றது. பெண்கள் விலைப்பொருளாகமதிக்கப்படுகின்றனர். மற்றும்அடிமைப்பொருளாகவும் மதிக்கப்படுகின்றனர். குழந்தைப்பருவம், இளமைப்பருவம், கல்யாணப்பருவம்' வாழ்க்கைப்பருவம், முதுமைப்பருவம் ஆகிய எல்லாப்பருவங்களிலும் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். இவைகளைப்பற்றி நான் சொல்லுவது பழமை விரும்பிகளுக்குக் கஷ்டமாய்த்தோன்றலாம். ஆனால் அப்படிப்பட்டவர்கள்பெண்களாயிருந்து அநுபவித்துப்பார்த்தால் தெரியும்.

ஆஸ்திக நாஸ்திகம்.

முடிவாக ஆஸ்திக நாஸ்திகத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது ஒரு பயனற்ற விஷயம். ஏனெனில் ஆஸ்திகமும், நாஸ்திகமும்100-க்கு 99 பேர்களின் அபிப்பிராயங்கள் பழக்க வழக்கங்களால் பிறர் சொல்லிக் கொடுப்பதால் சேர்க்கையால் ஏற்படுவதே ஒழிய ஒரு இயற்கை உணர்ச்சி அல்ல. அன்றி பசி, தூக்கம், பஞ்சேந்திரிய உணர்ச்சி ஆகியவைகளைப்போல் இயற்கையாய் ஏற்படும் எண்ணம் அல்ல. அதைப்பற்றி மனிதன் கவலைப்படவேண்டியதே இல்லை. அது இன்று ஒரு ஆராய்ச்சி விஷயமாகி நாகரீக விஷயமாகவும் பேசப்பட்டு வருகின்றது. மனிதனுக்கு கட்டும்,காவலும், சட்டமும், போலீசுமாய்த்தான் இருக்கின்றனவே ஒழிய கடவுளோ, நரகமோ, சாஸ்திரமோ, ஒழுக்கமோ கட்டிக் காப்பாற்றி விடவில்லை. அனுபவத்திலும் எவனும் அவற்றின் மீது எவ்விதப் பொறுப்பையும் சுமத்துவதும் இல்லை.

ஆதலால் ஆஸ்திக நாஸ்திகம் என்பது ஒரு பயனற்ற பிரச்சினையாகும். மற்றும் அது அவனவனுடைய சொந்த புத்தி, யோசனையைப்பொருத்ததாகும்.

ஆதலால் நமது வாழ்வில் ஏற்படவேண்டிய இன்ப, துன்பங்களுக்கும், முற்போக்குக்கும்,மாறுதலுக்கும் ஆஸ்திக நாஸ்திகத்தைக்கொண்டு வந்து குறுக்கே போட்டுக்கொண்டு யாரும் கஷ்டப்படவேண்டியதில்லை.

நம்மைப் பொருத்தவரை எந்த அளவில் ஆஸ்திகததில் பிரவேசிக்கின்றோம் என்று நினைப்பீர்களானால் வாழ்க்கையின் நலங்களைக் கடவுளின் மீது பொறுப்பேற்றுவதும், கடவுளுக்காகச் செல்வங்களை மக்கள்—வாழ்க்கைக்குரிய பொருள்களைப் பாழாக்குவதையும் பொருத்த அளவில்தான் பிரவேசிக்கின்றோம்.

மற்றபடி எவன் எத்தனை கடவுளை எந்த விதமாக நினைத்துக் கொண்டாலும், வணங்கினாலும், அவற்றோடு பேசினாலும் அது வே ஆய் விட்டாலும் நமக்கு அக்கரையில்லை. (சிரிப்பு)

உலகத்தைப் பொது என்றும் உலகப் பொருள் போக போக்கியங்கள் யாவருக்கும் சமம் என்றும் எண்ணவேண்டும். இதற்குக் கடவுள் குறுக்கிடாமல் இருந்தால் கடவுளைப்பற்றிய வேலை நமக்கு இல்லை. அதைப்பற்றிய கவலையும் இல்லை. ஆகையால் அதை ஒரு பெரிய பிரச்சினையாக வைத்துக் கொண்டு எவரும் கஷ்டப்பட வேண்டியதில்லை.

மற்றொரு சமயம் இந்த ஊருக்கு வந்து இன்னும் பல விஷயங்களைப்பற்றிப் பேச ஆசைப்படுகிறேன். கடைசியாக உங்கள் வரவேற்புக்கும், புகழ் மொழிகளுக்கும், என்னிடம் காட்டிய அன்புக்கும், சிறப்பாக தோழர் முத்துசாமி வல்லத்தரசு அவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

விடுதலை லட்சியம்.

நிற்க இந்தியா சட்டசபை தேர்தல் விஷயமாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்பொழுதுள்ள உண்மை நிலைமையையும், அரசியல் சமுதாய, பொருளாதார வாழ்வில் அனுபவ பூர்வமாக காரியம் எவ்வளவு தூரம் சாத்யமாகுமென்பதையும் ஜனங்கள் உணர்ந்து அதன்படிநடக்கவேண்டியிருக்கிறது. கூடிய சீக்கிரம் நமதுதேசம் விடுதலை இயக்க முறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று நான் எப்பொழுதும் கூறிவந்திருக்கிறேன். அரசியல் விடுதலையும் சமூக நீதியுமே எனது மேலான லட்சியங்கள். இவைகளுக்கே உழைப்பதென்பது எனது விரதம்."

காங்கிரஸ் நிலைமை.

டாக்டர் வரதராஜுலு மேலும் பேசியதாவது:—

காங்கிரஸின் ஜீவன் இன்னுமிருக்கிறதெனினும்அதன் தேகம் சிதைந்து அங்கங்கள் முறிந்து விட்டன. இப்பொழுது கட்டுப்பாடான எந்த காரியமும் காங்கிரஸில் சாத்தியமில்லை. மகாத்மா காந்தி காங்கிரஸை விட்டு சீக்கிரத்தில் விலகிவிடப் போகிறார். காங்கிரஸ் சமதர்ம வாதிகளின்கைக்கு மாறிவிடப் போகிறது. ஆகையால் இந்தியா சட்டசபைக்கு எல்லா கட்சிகளிலுமுள்ள மேலான திறமைவாய்ந்தவர்களையே அனுப்பி வைக்கவேண்டுமென்று எனது தேச மக்களை மனப் பூர்வமாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சியின் பழைய சரித்திரம் எப்படி யிருப்பினும் சரி, இனி அவர்கள், தேசத்திற்கு விரோதமாக நடக்க முடியாதென்பது மட்டும் நிச்சயம். ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் போராட்டத்தின் முதல் பாகத்திலே, தென்னிந்தியாவில்பிராமண ஆதிக்கத்தை வெற்றி கரமாக சிதைத்து விட்டார்கள். எதிர்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் தேசிய நோக்கம் கொள்ளாமலிருக்க முடியாது. வடக்கே காங்கிரஸ் தலைவர்கள் ஹிந்து-முஸ்லீம்பிரச்சினைசம்பந்தமாக தினே தினேநிலைமையை அதிகம் சிக்கலாக்கிவருகிறார்கள்.தென்னிந்தியாவிலோ காங்கிரஸைக் கைப்பற்றி யிருப்பவர்கள்பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதாருக்கு முள்ள வேற்றுமையை அதிகரித்து வருகிறார்கள். இதைக்கண்டு நான் மிகவும் துக்கப்படுகிறேன். எல்லா ஜாதியினரும், தங்கள் ஜாதி, நிறம்இவைகளைப்பற்றியே அதிகம்சிந்தித்துக்கொண்டிருக்காமல், இத்தேச விடுதலைக்காகவும்,மேலானபொருளாதார சீர்திருத்தத்திற்காகவும் ஒத்துழைக்கவேண்டுமென, எல்லா ஜாதியிலுமுள்ள புத்திசாலிகளை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

களா? மீண்டும் அங்கு செல்லாமல் இருப்பீர்களா?

3. ஹரிஜன சேவை விஷயமாக ஆரம்பத்திலிருந்தே, தோழர் காந்தி காங்கிரஸை உட்படுத்தியே பேசியும், எழுதியும் வந்திருக்கும்போது தற்போது சட்டசபைப் பிரவேசத்தைக் குறிக்கோளாகக்கொண்டு இரண்டையும் பிரித்து வேறுபடுத்தி தாங்கள் பேசி வருவது தேர்தல் சூழ்ச்சியல்லவா?

4. பெண்ணுரிமை பேணும் காங்கிரஸானது, கோவை, சேலம், வட ஆற்காடு தொகுதியில் இந்தியா சட்டசபைக்கு நிற்கும் தோழர் ராதாபாய் சுப்பராயன் அவர்களுக்கு டாக்டர் வரதராஜுலு அவர்கள் விட்டுக்கொடுக்க சம்மதித்தும் காங்கிரஸ் சார்பாக நிற்கும் அவினாசிலிங்கம் விட்டுக் கொடுக்காததின் காரணம் என்ன?

ஷை நான்கு கேள்விகளுக்கும் ஒன்றும் புரியவில்லை யென்று பதில் சொல்லாமல்மழுப்விட்டு இந்தமாதிரி கேள்விகளெல்லாம் இனிமேல் என்னைக்கேட்கவேண்டாம் என்றும், உங்கள் வேலைக்கு நான் தடையாக சத்தியமாய் வரவில்லை என்றும், நீங்களும் என் வேலையில்குறுக்கிட வேண்டாம்என்றும் சொன்னார்.

## தோழர். சி. டி. நாயகம் மருமகள் மரணம்.

கூட்டுறவு இலாக்காமாஜி டிப்டி ரிஜிஸ்தரார் தோழர் ஸி.டி.நாயகம் அவர்கள் குமாரர், ராக்பெல்லர், பவுன் டேஷன் சகாய நிதியின் உதவியால் உயர்தரக் கல்வியின் பொருட்டு அமெரிக்காவிற்கு தமது மனைவியுடன், பிரயாணமானார். தம்பதிகள் இருவரும் சுகமாகவே மார்சேல்ஸ் துறைமுகத்தைச் சேர்ந்தனர். ஆனல் அங்கு அம்மையாருக்கு டைபாயிட் சுரம் வந்ததாகவும், பின்னர் அது நிமோனியாவில் கொண்டுவந்து விட்டதாகவும் தெரியவந்தது. மேலும், அம்மையாருக்கு தேர்ச்சி பெற்ற டாக்டர்கள் வைத்தியம் செய்தமையாலும், அதன் பயனக ஏற்பட்ட மாறுதலாலும், அம்மையார் சுகமடைவார்களென்றும், பிறகு தம்பதிகள் இருவரும் அமெரிக்காவிற்குச் செல்வார்களென்றும், எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், ஞாயிற்றுக்கிழமை இரவு கிடைத்துள்ள தந்தியில் அம்மையார் இறந்தார் என்ற திடுக்கிடத்தக்கதும், நெஞ்சுருக்கக் கூடியதுமான செய்தி தெரியவந்தது. இத் தம்பதிகளுக்குத் திருமணமாகி வருடம் 6 ஆகிறது. உயர்தரக் கல்வியின் பொருட்டு அமெரிக்கா செல்லும் போது, நடு வழியிலே அறிமுகமில்லாத நகரிலே, தமது பெற்றோரும், குழந்தைகளும் இல்லாத சமயத்திலே, அம்மையார் பிரியநேர்ந்ததும், அவர்களது கணவனுக்கு ஆறுதல் சொல்வதற்கும் ஆள் இல்லாது போனதும் விசனிக்கத்தக்கது. தமது அருமை மருமகளை இழந்த தோழர். நாயகம் அவர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## ராவ்பகதூர் பன்னீர் செல்வம்.

### விருதுநகர் முனிசிபாலிடி உபசாரம்.

சென்னை சர்க்கார் உள்நாட்டு மந்திரியான ராவ்பகதூர் பன்னீர் செல்வத்தை 11-10-34ந் தேதி காலை 10 மணிக்கு விருதுநகர் முனிசிபாலிடியார் வரவேற்று உபசரித்தனர். அவர்கள் உள்நாட்டு மந்திரிக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்தில், விருதுநகரை ராமனுதபுரம் ஜில்லாவின் தலைநகரமாக மாற்ற வேண்டுமென சர்க்காரை வற்புறுத்தும் படி கேட்டுக் கொண்டனர். உள்நாட்டு மந்திரி தமது பதிலில் கூறியதாவது:— விருதுநகர் தலைநகரமாக இருக்கத் தகுதியான இடமாதலால், தலைநகரத்தை மாற்றும் போது நிச்சயமாக விருதுநகரையே தலை நகரமாக்குவார்களெனக் கூறினர். பின்னர் புதிய முனிசி பல் மார்க்கெட்டிற்கு மந்திரி அஸ்திவாரக்கல் நாட்டினர். அதன் பின் ஊர் வலமும் நடந்தது.

பின் உள்நாட்டு மந்திரி அவர்களுக்கு ராவ்சாகிப் எம். எஸ் செந்தில் குமாரு அவர்கள் தேநீர் விருந்தொன்று நடத்தினர்.

## உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.

### சுயமரியாதைச் சங்கம் நாகபட்டினம்.

6-10-34-ந் தேதி மாலை 6-30 மணிக்கு சங்க மெம்பர்கள் கூட்டம் சங்கத்தலைவர் தோழர் எ. பெருமாள் தலைமையின் கீழ் கூடியது.

தலைவர் தனது பல வேலைத் தொந்தரவுகளால் தனது முழு நேரத்தையும் சங்கத்திற்காக உபயோகப் படுத்த முடியாததால் தான் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாகக் கூறினர். மறு தேர்தல் வரை தோழர் எஸ். பி. கிருஷ்ணன் அவர்கள் தலைவராகவும், தோழர் வி. சாமிநாதன் அவர்கள் உபதலைவராகவும் கே. முருகேசன் காரியதரிசியாகவும் தோழர் என். எம். சாமி அவர்கள் உபகாரியதரிசியாகவும் இருக்கவேண்டுமென்று ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சென்ற தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்களே மீண்டும் நிர்வாகஸ்தர்களாக இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட பின் தலைவர் முடிவுரையோடு கூட்டம் கலைந்தது.

## கே. ஆர். ஜி. பால் வெற்றி.

மன்னார்குடி முனிஸிபல் தேர்தலில் 5-வது வார்டுக்கு சென்னைமாகாண நாஸ்திக சங்க கமிட்டி அங்கத்தினரும், தஞ்சை ஜில்லா 2-வது சுயமரியாதை மகாநாட்டுக்கும் தமிழ் மாகாண 1-வது சமதர்ம மகாநாட்டுக் கும் காரியதரிசியும் தற்போது தஞ்சை ஜில்லா காங்கரஸ் கமிட்டி அங்கத்தினரும், மன்னார்குடி தாலுக்கா காங்கரஸ் கமிட்டி அங்கத்தவரும் பிரபல சுயமரியாதை இயக்கத் தோழருமான தோழர் கே. ஆர். ஜி. பால் அவர்கள் 84 ஓட்டுகளால் கௌன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு எதிரியாக நின்றவருக்கு 15 ஓட்டுகள் தான் கிடைத்தது.

## மரகதவல்லி கௌன்சிலர்.

காரைக்குடி முனிசிபல் தேர்தலில் தோழர் எம். மரகதவல்லி முருகப்பா அவர்கள் கௌன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


# நீரழிவு.

## நீர்க்கடுப்பு, வெள்ளை, வெட்டை, பவுந்திரம் முதலிய வியாதிகளுக்கு 120 புடம் போட்ட அப்ரேக் செந்தூரமும் மேகநாத நெய்யும் சாப்பிடுங்கள்.

இந்த மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான ரோகஸ்தர்கள் குணமடைந்து விட்டார்கள். நீரழிவுக்கு இதைப்போன்றதொரு குணமுள்ள மருந்து வேறெங்கும் கிடைக்காது. போலி மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டு மோசம் போகாதீர்கள்.

இதற்குப் பரீக்ஷை.

ஒரு மண்கலசத்தில் ஊசியினல் 7, 8 துவாரங்கள் போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் செந்தூரத்தைச் சிறிது போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்திவிடும். இதைப்போலவே நீரழிவினல் அதிகமாகப்போகும் நீரை நிறுத்தியும், நீரில் சர்க்கரை இருந்தால் அதை மாற்றியும், நீர்ப்பெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்திமேகம், நீடித்த வெள்ளை, இந்திரியம் நீருடன் போதல், பவுந்திரம் முதலிய வியாதிகளை அதிவிரைவில் குணப்படுத்துகின்றது. எவ்வளவு நாட்பட்ட கொடிய ரோகமாயிருந்த போதிலும் 24 நாள் வரை நமது செந்தூரத்தைச் சாப்பிட்டால் குணமடையலாம்.

24 நாள் மருந்து விலை ரூ. 15. 12 நாள் மருந்து விலை ரூ. 10. 3 நாள் மேகநாத நெய் ரூ. 5.

குறிப்பு:— சிலருக்கு நீரானது பசு மூத்திரம் போலும் கற்றாளஞ்சாற்றைப்போலும் சுண்ணாம்புத் தண்ணீர் போலும், பனங்கள்ளைப்போலும், நெய்யைப்போலும், தேனைப்போலும், கொழுப்பைப் போலவும் இறங்கும். காய்ச்சினல் அந்தந்த வாசனை கொடுக்கும். இப்படிப்பட்ட நோய்களெல்லாம் நிச்சயமாய் குணமாகின்றது. நம்பிக்கையுடன் மருந்தைத் தருவித்துச் சாப்பிடுங்கள். நம்பிக்கையற்றவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொண்டு போகலாம். மருந்துடன் சாப்பிடும் பத்திய பாகங்கள் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் 5 ரூபாய் அட்வான்சாய் அனுப்பி மருந்துக்கு ஆர்டர் செய்யவேண்டும்.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,

சித்தவைத்தியசாலை, ஈரோடு.

(கோயமுத்தூர் ஜில்லா)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

### போலிசாரைச் சுட்டனர்.

மாட்ரிட் கிழக்குப் பிரதேசத்தில் கலகம் மும்முரமாக இருக்கிறது. வேலை நிறுத்தக்காரர்கள் வீட்டுக்கூரைகளின்மேல் இருந்து கொண்டு போலீசாரைச் சுடுகிறார்கள். போலீசார் கிடைத்த இடத்தில் மறைந்து கொண்டு பதிலாக சுடுகிறார்கள். 6-ம் தேதி காலையிலிருந்து நேரம் போகப் போக சண்டை வலுத்துக்கொண்டே வருகிறது. ஏராளமான போலீஸ்படைகள் வந்திருக்கின்றன.

காயமடைந்தவர் எல்லோருக்கும் சிகிச்சைசெய்ய ஆஸ்பத்திரியில் போதிய இடமில்லை.

இன்னும் 48 மணிநேரத்தில் கடுமையான யுத்தம் நடக்கலாம். சர்க்காரின் கதியென்ன வென்பது அப்பொழுது தான் தெரியும்.

பிரதம மந்திரி லராக்ஸ் தைரியமாகவே இருக்கிறார். புரட்சிக்காரர் என்ன தான் செய்தாலும் அதெல்லாம் சர்க்கார் எதிர்பார்த்ததற்கு அதிகமாய்ப் போய் விடாது என்று அவர் கருதுகிறார்.

ஆஸ்தூரிய ஜில்லாக்களில் பல கிராமங்களை புரட்சிக்காரர் கையிலிருந்து சர்க்கார் துருப்புகள் மீட்டு விட்டதாகத் தெரிகிறது. புரட்சிக்காரர் மலைகளிலும், சுரங்கங்களிலும் நுழைந்து தப்பித்துக்கொண்டதாய்த் தெரிகிறது.

### புரட்சிக்காரருக்கு கொலை தண்டனை.

ஆஸ்தூரிய மாகாணத்தில் ஒவிதோவுக்குள் வரும் ரயில் பாதைகளையெல்லாம் புரட்சிக்காரர் தடுத்திருக்கிறார்கள். லஸானிலிருந்து சர்க்காருக்கு துருப்புகள் வருவதை தடுப்பதே இதன் நோக்கம். பாஸ்கு ரயில்வேக்களில் வண்டிகள் போகமுடியாது. மந்திரி சபைக் கூட்டம் பலமான பாதுகாப்புடன் நடக்கிறது கூட்டத்தை விட்டு வெளியேறுகையில், உள்நாட்டு மந்திரி ராய்ட்டர் நிருபரிடம் கூறியதாவது:—"ஆஸ்தூரியாவில் புரட்சி இயக்கம் ஒடுங்கி விட்டது. சர்க்கார் ராணுவ பலம் பூரணமாக இருப்பதால் இனிமேல் ஒரு கலகமும் கிளம்ப முடியாது."

புரட்சி வேலை நிறுத்தக்காரர் மீது கொலை தண்டனை விதிப்பதற்கு சட்டம் சிருஷ்டிக்கப்படுகிறது. இதனால் சர்க்காருக்கு பலம் அதிகமாகும். மாட்ரிட் கிழக்கு முனையில் நடந்த கலகத்தில் இரண்டு பேர் மாண்டனர். அராஜக சங்கத்தினர் தான் இங்கு புரட்சியைத் தூண்டியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

### மந்திரிகள் கைதியாயினர்.

### தோழர் அஜானு கதி என்ன?

காடலோனியாவில் உள் நாட்டு மந்திரியானடெங்காலைத்தவிர மற்ற மந்திரிகளையெல்லாம் கைதிசெய்து விட்டார்கள். கலகக் காரர்களுடன் சேர்ந்து கொண்ட தோழர் அஜானுவின் கதி என்னவாகு மென்பது நிச்சயமாகத் தெரிய வில்லை. காடலோனியா தலைவரான டான் கம்பெனிஸை ராணுவ கோர்ட்டில் விசாரித்து அவருக்கு மரண தண்டனை விதிக்காமல் தடுக்க தலைவர் தோழர் ஜாமோரா அவ்விஷயமாக நேரில் தலையிட்டாரென்று தெரிகிறது. ஆனால் ஷையார் இரு எச்சரிக்கைகளையும் லக்ஷியம் செய்ய வில்லை. முதல் எச்சரிக்கையை அவர் அலக்ஷியம் செய்து விட்டதால், ஜெனரல். பாடெட் மாளிகையை நோக்கி சுட்டார். அரை மணி நேரம் வரை துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இரண்டாவது எச்சரிக்கையையும் அவர்கள் லக்ஷியம் செய்யாமல் போகவே, அவரது மாளிகையை பீரங்கிகளாலும், வெடிகுண்டுகளாலும் எதிர்த்தனர். எனவே அவர் சரண்புகும்படி நேர்ந்தது.

ஜெனரல் பாடெட் மிகவும் அவசரமாக ஜிரோனாவுக்குச் சென்றிருக்கிறார். பல மாகாணங்களிலும் சண்டை நடந்து வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. ஆனால், இன்று மாலை உள்நாட்டு மந்திரி காரியாலய பால்கனியிலிருந்து ஸ்ரீ. லராக்ஸ் செய்த பிரசங்கமொன்றில், காடலோனியாவிலும், ஆஸ்தூரியாவிலும் புரட்சியை அடியோடு அடக்கி விட்டதாகக்குறிப்பிட்டார்.

### பிரதம மந்திரி தப்பிய ஆச்சரியம்.

6ந்தேதி இரவு இங்கசில் பரபரப்பான சம்பவங்கள் ஏற்பட்டன வெனினும், இப்போது நிலைமை அமைதியாகவே இருந்து வருகிறது. எனினும் தெருக்களில் ஏராளமான ஜனங்கள் கூடி, ஸ்பெயின் ஐக்கியமடைய வேண்டுமென ஆரவாரம் செய்தனர். இளைஞர்களான கத்தோலிக்க பிரமுகர்கள் தோட்டி வேலை முதலிய முனிசிபல் வேலைகளைச் செய்தபோது, ஜனங்கள் அவர்களைப் புகழ்ந்தனர். ஷை செல்வவந்தர்கள் தோட்டி வேலை செய்தது உருக்கமான காட்சியாகும்.

6ந்தேதி பிரதம மந்திரி உயிர் தப்பியது ஆச்சரியகரமான சம்பவமாகும். மந்திரி சபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, இரண்டு தோட்டாக்கள் அதிவேகமாக சபைக்கு நடுவே சென்றன. எனினும் பிரதம மந்திரி சிறிதும் கலங்காது தமது அலுவலைச் செய்துகொண்டிருந்தார். சில நிமிஷ நேரத்திற்கெல்லாம் லராக்ஸ், உள் நாட்டு மந்திரி காரியாலயத்தின் மாடித் தாழ்வரையில் நின்று பேசுகையில், ஜனங்களின் உயர்வான நோக்கத்தைக் குறித்து அவர்களுக்கு வந்தனமளித்தார். அதற்கப்பால் சிறிது நேரத்திற்குப் பின் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பமாயிற்று. எனவே கூட்ட ஜனங்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்காக தத்தளித்தனர். பின்னர் பல விடங்களிலும் சண்டை பரவி விட்டது.

### ரயில்மீது சுட்டனர்.

சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்த ரயில் மீது கலகக்காரர்கள் சுட்டார்கள். சென்ட்ரல் மார்க்கெட்டுகளில் நடந்த கலகத்தில் 3 பேர்கள் மாண்டனர்.

### கிறிஸ்துவாலயம் எரிந்தது.

ஓர் சித்திரக்காரர் காரியாலயத்தில் சென்ற 4 நாட்களாக ஒளிந்து கொண்டு அலுவல்களை நடத்திவந்த அபேதவாத இளைஞர் சங்கப் புரட்சி கமிட்டியை திடீரென கண்டுபிடித்து விட்டார்கள். பார்லிமெண்டிலுள்ள 3 அபேதவாதக் கட்சி அங்கத்தினர்களுள்பட பலரைக் கைது செய்திருக்கிறார்கள். வில்லாரோப்னிடோ என்ற விடத்தில் பொதுவுடமை ஆதிக்கத்தை அமைக்க முயன்றனர். அதனால் ஏற்பட்ட கலகத்தில், கடுமையான போராட்டம் நடந்தது. அதன் பயனாக 6பேர்கள் மாண்டனர். 25 பேர்கள் காயமடைந்தனர் இன்னும் கலகக்காரர்கள் ஒரு கிறிஸ்துவாலயத்தையும், விவசாயிகள் காரியாலயங்களையும் எரித்து விட்டனர். அவர்கள் கரோ லைனிலுள்ள ஒரு கிராமத்தைக் கைப்பற்றி ஒரு வீட்டிற்கும் தீ வைத்தனர். எனவே, அவ் விடத்திற்கு ஏராளமான போலீசார் சென்று கை வெடிகுண்டுகளை உபயோகித்து, தொழிலாளர் சங்கக் கட்டிடத்திலிருந்து கலகக்காரர்களை விரட்டினார்கள். அப்போது நடந்த கலகத்தில் இரு கலகக்காரர்கள் மாண்டனர் 8 பேர்கள் காயமடைந்தனர். ஏராளமான வெடிமருந்துகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் இத்தேசத்திலுள்ள பலவிடங்களிலும் நிகழ்ந்திருக்கின்றன.

### ரயில்கள் போக்குவரத்து.

9-ந்தேதி காலை நிலைமை மிகவும் அமைதியாக இருந்தது இப்போது டிராம் வண்டிகளும், சுரங்க ரயில் வண்டிகளும் போய் வருகின்றன. அவைகளைத் துருப்புகள் ஓட்டி வருகிறார்கள். மோட்டார் லாரிகளில் கடைகளுக்கு உணவு சாமான்கள் வந்துகொண்டிருக்கின்றன. பெரும்பாலான கடைகளும், ஹோட்டல்களும் திறக்கப் பெற்றிருக்கின்றன. பார்விலோனாவிலும் இப்போது நிலைமை அமைதியாகி வருகிறது. அங்கு ரயில் வண்டிகள் பஸ்கள், டிராம்கள் முதலியன சென்று வருகின்றன. தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் வேலை ஆரம்பித்து வருகிறார்கள். ஸ்பெயின் சர்க்கார் காடலோனியாவிற்கு கர்னல் அட்டோனி ஏரிஜனை தலைவராக நியமித்திருக்கிறார்கள்.

### 500 பேர்கள் மாண்டனர்.

இங்கு நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. 8-ந்தேதி காலை நிலைமை அமைதியாகவே இருந்ததெனினும், இப்போது சண்டையும் வெடிகுண்டு வீச்சும் மும்முரமாக இருந்து வருகிறது. உணவு சாமான்களுக்கு மிகவும் கிராக்கி ஏற்பட்டிருப்பதால், கடைகளில் எங்கு கொள்ளையடிப்பார்களோ என்ற திகிலேற்பட்டிருக்கிறது, உணவுக்கு மா, ரொட்டி, உருளைக்கிழங்குகள் முதலியன எதுவும் இங்கில்லை. பலர் பௌடர் பாலை மாத்திரம் உபயோகித்து வருகிறார்கள். தேசம் முழுதும் இதுவரை மாண்டவர்களின் மொத்த தொகை தெரியவில்லையெனினும், 500 பேர்கள் வரை மாண்டனரென்றும், 2000 பேர்கள் காயமடைந்தனரென்றும் தெரிகிறது. டார்ரகோனாவில் நடந்த கலகத்தில் துருப்புகளிடை 9 பேர்கள் மாண்டதுடன், 37 பேர்கள் காயமடைந்தனர்.

### அபேதவாதிகள் ஆட்சி!

8-ந்தேதிஇரவு இங்கு அபேதவாதிகள் தங்கள் ஆட்சியை அமைக்க முயற்சிப்பார்களென பொதுவாக அபிப்பிராயப் படுகிறார்கள். ரயில்வே பொது வேலை நிறுத்தமும் நாளை அமுலுக்கு வரும். எனவே சர்க்கார் ரயில்வேக்களையெல்லாம் ராணுவ மயமாகச் செய்து விட்டார்கள். எனவே சகல ரயில்வே தொழிலாளர்கள் விஷயத்திலும் ராணுவ விதிகளை உபயோகிப்பார்கள். அதாவது அவர்கள் வேலை செய்ய மறுக்கும் பட்சத்தில் அவர்களைச் சுட்டுவிடலாம். எல்லோரும் வேலைக்கு ஆஜராகவேண்டுமென்று அவர்களுக்கு 24 மணி கெடுக்கொடுத்திருக்கிறார்கள்.

8ந்தேதி மாலை இங்கசில் மீண்டும் கடுமையான போராட்டம் ஏற்பட்டது. பியூர்டா டெல்ஸால் என்ற விடத்திலுள்ள தபால் ஆபீஸ் ஜன்னல்களையெல்லாம் தூளாக்கி விட்டனர். காலையில் ஓர் ஹோட்டலைச் சேர்ந்த இரு வேலைக்காரர்களுள்பட 7பேர்கள் மாண்டனர்.

### குடும்பங்கள் நாசம்.

வேலன்ஷியாவைச் சேர்ந்த பாருகிலோவில் துருப்புகள் பட்டாளப் பிரதேசங்களை சூரையாடியதுடன், சகல குடும்பங்களையும் கொன்று விட்டார்கள். கன்னிகாப் பெண்களால் நடத்தப்பட்டு வரும் அனாதை விடுதியையும் நாசமாக்கி விட்டார்கள். அதில் பலர் மாண்டனர்.

---

### சர்க்கார் கட்டிடங்களில் ஆயுதசாலைகள்!

காடலோனியாவிலுள்ள பெரும்பாலான சர்க்கார் கட்டிடங்களையும் ஆயுதசாலைகளென்று கூறலாம். ஏனெனில் ஷைகட்டிடங்களிலிருந்து 1000 துப்பாக்கிகள், 8பெட்டி வெடிகுண்டுகள், 125 பெட்டி வெடி மருந்துகள் முதலியவைகளைக்கண்டு பிடித்தனர். பார்விலோனா உள்நாட்டுமந்திரி காரியாலயத்திலிருந்து ஏராளமான சில்லரை ஆயுதங்களையும் கண்டு பிடித்

திருக்கிறார்கள்.

கடைசியாக ஆஸ்துரியா சுரங்கப் பிரதேசத்திலிருந்து வந்துள்ள செய்திகள் நம்பிக்கையை அளிக்கக்கூடியவையாக இல்லை. ஏனெனில் வேலை நிறுத்தம் செய்துள்ள சகல தொழிலாளர்களிடத்திலும் ஆயுதங்களும் பீரங்கிகள்கூட இருந்து வருகின்றனவென்று தெரிகிறது.

### ரஸ்தாக்கள் நாசமாயின.

டெலிபோன் போக்குவரத்தெல்லாம் தடைப்பட்டிருக்கிறது. ரஸ்தாக்களை யெல்லாம் சீர்குலைத்து விட்டார்கள். தேசத்தில் காடு முரடான பிரதேசங்களும், குன்றுப்பிரதேசங்களும் அதிகமாக இருப்பதால் துருப்புகள் போக்கு வரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மொராக் கோவிலிருந்து கிஜானில் 2500 துருப்புகள் வந்திறங்கின. அவர்களை யுத்தக்கப்பல் எதிர்த்து வருகிறது மாலகா கிராஜடா இவ்விரு இடங்களிலும் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமாகியிருக்கிறது. தெருக்களில் சச்சரவு நடந்து வருவது ஓய்ந்த பாடில்லை.

### ராணுவக் கோர்ட்டு ஆரம்பம்

நாளை முதல் ராணுவக்கோர்ட்டுகள் ஆரம்பமாகும். கலகத் தலைவர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்தால், அவர்களுக்கு தியாகிகளென செல்வாக்கு ஏற்பட்டு விடுமாதலால் சாதாரணமானவர்களுக்கே மரண தண்டனை விதிப்பார்களெனத் தெரிகிறது.

அண்டு ஜேஷியாவில் அபேதவாதிகள் ஆரம்பித்த வேலை நிறுத்த இயக்கத்தை தேசிய ஐக்கியத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அராஜகர்கள் ஆதரிப்பதெனத் தீர்மானித்திருப்பது சர்க்கார் கஷ்டத்தை அதிகப்படுத்தி யிருக்கின்றன. அங்கு புரட்சிக்காரர்கள் இடை விடாது போலீசாரை சுட்டு வருகிறார்கள். மற்றும் கிராமப் பிரதேசங்களிலும் கலகங்கள் நடந்து வருவதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன.

---

### பாஸ்கில் தனிக் குடியரசு.

பீஸ்கு மாகாணத்தில் தனக்குடியரசு ஏற்பட்டதாக பெர்மியோ புரட்சிக்காரர்கள் அறிவித்தார்கள். நகர மண்டபத்தில் புரட்சிக் கொடியையும் நாட்டினார்கள். ஆனால் போலீசார் அமைதியை ஏற்படுத்தி விட்டனர்.

பார்சிலோனாவில் தொழிலாளர் சங்கத்தினர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இன்றே கடலினாவில் தனிக்குடியரசு ஏற்பட்டு விட்டதாக பகிரங்கப்படுத்தி விடவேண்டும். நாளைவரையில் பொறுத்திருந்தால் நடக்காது என்று அவ்வறிக்கை கூறுகிறது.

பார்சிலோனாஜில்லாவில்பெண்கள் ஏராளமாக புரட்சி இயக்கத்தில் கலந்து கொள்ளுகிறார்கள். இரண்டுபேர் கையில் வெடி குண்டுடன் கைதியாயினர்.

---

### தளபதிகள் கொலை.

ஜிரோஜ்வில் ஸ்பெயின் துருப்புகள் கலகம் செய்து, தளபதி, இரண்டு மேஜர்கள், காப்டன் முதலியோரைக் கொலை செய்து விட்டார்களென்று தெரிகிறது.

### 20 பேர்கள் மாண்டனர்.

இங்குள்ள மாளிகையை கொடுத்து விட்டார்களெனினும், இந்நகரிலுள்ள சில பிரதேசங்களிலும் இன்னும் யுத்தம் நடந்து வருகிறது. கலகக்காரர்கள் கடற்படை, ஆகாயப்படைகளை எதிர்த்ததில் 20 பேர்கள் மாண்டதுடன், 70 பேர்கள் காயமடைந்தனர்.

---

(5 ம் பக்கத்தொடர்ச்சி)

இத்தகைய (Capitalism) முதலாளித்துவ முறை என்பது பண்டைய காலம் தொட்டு இன்றுவரையிலும் நடைபெற்றுவரும்—மிகச்சிலரிடத்தில் உலக செல்வம் சேரும் முறையாகும்! உலக செல்வம் சொற்பப்பேரிடத்தில் போய் சேர்ந்து அவர்களுக்கே சொந்தமாகி விடுவதால் பெரும்பான்மையினர்கள் வறுமையாளர் ஆனார்கள். சொந்தக்காரர்கள் என்னும் சிறுபான்மையினர்களிடத்தில் உலக செல்வம் சேர்ந்து விடுவதால் மிகப் பெரும்பான்மையினர்கள் செல்வம் இல்லாத ஏழையானார்கள்! இந்த முறையில் வறுமையாளர் ஆகிய உலக மக்களில் பெரும்பான்மையினர்கள் ஜீவிக்க வகை இன்றித் துன்புறுகிறார்கள். (Capitalists) முதலாளிகள் என்பவர்களுக்கு உலக செல்வம் சேர்ந்து சொந்தமாக்கிக்கொள்ளப்பட்டு வருவதால்தான் முதலாளி ஏழை என்று உலக மனித சமூகம் இரண்டு பிரிவாய்ப் பிரிந்திருக்கின்றன. முதலாளி என்பவர்கள் மிகச் சிறுபான்மையினர்களாகவும் ஏழை என்பவர்கள் மிகப்பெரும்பான்மையினர்களாகவும் இருந்துவருகின்றனர். இச்சிறு பான்மையினர்களாகிய முதலாளிகளையும், மிகப்பெரும்பான்மையினர்களாகிய ஏழைகளையும் பல பெயர்களைக்கொண்டு அழைக்கப்பட்டு வருகின்றன. அதாவது:—முதலாளி தொழிலாளி, பணக்காரன்—ஏழை, தனவந்தன்—தனத்தை இழந்தவன், பிரபு—பிச்சைக்காரன், நிலச்சுவான் அடிமை, உள்ளவன்—இல்லாதவன் —————என்பவைகளே. இந்த முறையில் முதலாளிகளால் சமூகத்தை விட்டும் செல்வத்தில் சம்பந்தமில்லாத படி பிரித்து ஒதுக்கித்தள்ளப்பட்டுள்ள பெரும்பான்மையினர்கள் (ஏழைகள்) செல்வத்தைப் பெறவேண்டுமாகில் இன்றைய உலகோர் கருதும் சத்தியமல்லாததாயிருக்கும். மற்ற வழிகளோ சட்ட விரோதமானதும், மததர்மங்களுக்கு (மதங்களுக்கு) விரோதமானதுமான செய்கை என்று சொல்லப்பட்டு விடும். ஆகையால் அறிவுக்கேற்ற முறையில் முயற்சி செய்து சொந்தக்காரனிடமிருந்து பெருவது பெருத்த குற்றம் என்றும், ஏழ்மையும், பணக்காரத்தன்மையும் உலக சுபாவம் என்றும் காண்பிப்பதற்குத்தான் மததர்மங்களும் (மதங்களும்) ஏற்பட்டிருக்கின்றன. இம்மததர்மங்களை "சத்தியம்" என்று நம்பி ஒப்புக்கொண்ட மக்கள் பணக்காரத்தன்மையும் —ஏழ்மையும் உலக சுபாவம் என்று எண்ண ஆரம்பித்தார்கள். எண்ணினார்கள். இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். உலகஜனங்களில் சரிபாதி (100 கோடி) பேர் நம்பி ஒப்புக்கொண்டிருக்கும் "குர் ஆன்" "பைபில்" கீதை குறள் உள்பட உலகிலுள்ள எல்லாமத வேதங்களும் இந்த நியாய விரோதமான உலக சுபாவத்தை ஸ்தாபிக்கும் சட்டதிட்டங்களைக் கொண்டவைகளே! இன்றைய உலகமக்களில் மிகப்பெரும்பான்மையினர்கள் துன்பம் அனுபவிக்கக்கூடிய கொடியவறுமை ஏற்பட்டது இந்த முறையில் தான். வறுமையால் துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஏழை மக்கள் முதலாளிகளுக்கு விரோதமாகக்கிளர்ச்சி செய்யாமல் கொடிய துன்பத்தை பொறுத்துக்கொண்டு திருப்தியாய் இருப்பதற்குக்காரணம் "வறுமையானது உலக சுபாவம்" என்று மதங்கள் வாயிலாய் அவர்களுக்கு போதிக்கப்பட்டிருப்பதனால் தான் என்று துணிந்து சொல்லலாம்!! முதலாளிகள் தேவைக்கு அதிகமான அளவிற்கு மேற்பட்ட சுக போகங்களுடன் வாழ்வதை மதங்கள் "இந்த உலக சுபாவமே அப்படித்தான்" என்று காண்பிக்கின்றன!!! ஞானமில்லாத ஏழை மக்கள் அநீதமான இந்த உலக சுபாவத்தை மாற்றமுடியாத இயற்கை என்று ஒப்புக்கொள்கிறார்கள்!!!! இன்னும் சிலர் செல்வந்தராயிருப்பது கடவுளின் கருணையினால் என்றும், சிலர் வறுமையால் துன்புறுவது கடவுளின் கோபத்தால் என்றும் இன்னும் இவ்வுலகில் சுகமனுபவித்தால் "மறுஉலகம்" என்பதொன்றில் துன்பம் அனுபவிக்க நேரிடும் என்றும், இவ்வுலகில் துன்பமனுபவித்தால் மறு உலகில் சுகத்தை அனுபவிக்க முடியும் என்றும் முதலாளித்துவ மதங்கள் வாயிலாய் ஏழைகளுக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள்—மதசீர்திருத்தக் காரர்களும் திருப்பித்திருப்பி இதையே சொல்லிக்கொடுக்கிறார்கள்— மத ஆதாரங்களும் ஆயிரக்கணக்கான வருடங்களாக இதையே வற்புறுத்திப்போதித்துவருகின்றன! இப்போதனைகள் ஏழைகள் எல்லாத்துன்பங்களையும் சகித்துக் கொண்டு பொருமையுடன் இருப்பதற்கு ஏதுவாக இருக்கின்றன! இதனால் ஏழைகள் பொருளாதார உரிமைபெற்றுமேன்மையடைய முயற்சி செய்ய எழாமல் அபின் தின்றவர்கள்போல் மயங்கிக்கிடக்கின்றார்கள்!! இதனால் தான் கார்ல் மார்க்ஸ்என்னும் மெய்ஞ்ஞானி "மதம்மக்களுக்கு அபின் Religion is opium for the people" என்றார்! இதனால் தான் மக்களது துன்பத்தை ஒழிக்கப்பாடுபட்ட பெரியார் லெனினும் "சோஷிய லிஷத்திற்காக மதங்களை எதிர்த்துப் போராடு Fight against Religion Fight for socialism'; என்று மக்கள் சமூகத்திற்கு வற்புறுத்தியுள்ளார். நாம் சொல்லிவந்த முறையினால் தான் இக்கொடிய முதலாளித்துவம் உலகில் இருந்து கொண்டிருக்கின்றன.

(தொடரும்)

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வனுடன் அவளுடைய வீட்டிற்குச் சென்றான். அங்கே அவளைத் தனிமையாகக் கூடத்தின் ஒரு பக்கத்திற்கு அழைத்துச்சென்று அவள் முன் முழங்கால் படியிட்டு அவளுடைய அழகை நிந்தித்ததற்குத் தகுந்த தண்டனையைதான் அதற்குமறுநாளே அநுபவித்து விட்டதாயும் தன்னை மன்னிக்கும்படியும் கேட்டுக் கொண்டான். அப்பெண் அவனைத் தண்டித்தது யாரென்று கேட்க சந்நியாசி, "நான் அன்றிரவு ஜபம் செய்துகொண்டிருந்தபொழுது ஓர் ஒளி தோன்றியது. நான் அது என்னவென்று பார்ப்பதற்குத் திரும்பு முன்னே ஓர் அழகிய வாலிபர், கையில் பிறம்புடன் தோன்றி என்னைக் கீழேதள்ளி அடிக்க ஆரம்பித்தார். நான் அவ்வாறு என்னைத் தண்டிக்கக் காரணம் என்னவென்று கேட்க அவர், தான் கேப்ரியல் தேவதூதனென்றும், உம்முடைய சிறந்த அழகில் ஈடுபட்டு கடவுளுக்கு அடுத்தபடியாக உம்மிடமே அன்பு செலுத்துவதாயும் உம்முடைய அழகை நிந்தித்ததற்காகவே தான் அவ்வாறு அடித்ததாயும் கூறினார். நான் அவரை மன்னிக்கும்படி கேட்க அவர் உம்முடைய மன்னிப்பைப் பெற்றால்தான் முடியும் என்று சொன்னார். அதற்காகத்தான் நான் உம்மிடம் வந்தேன். அவர் சொன்ன மற்ற சங்கதிகளை நீங்கள் மன்னித்தபின் கூறுவேன்" என்றான். தன்னழகில் கர்வம் கொண்ட அப்பேதை இதைக்கேட்டு "பிதாஅல்பெர்டோவே! என்னுடைய அழகு தெய்வீகத்தன்மை கொண்டது என்று நான் அப்பொழுதே சொல்லவில்லையா? நீர் அடிபட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். உம்மை மன்னித்தேன். அவர் சொன்னதையெல்லாம் சொல்லுங்கள்" என்றாள். "ஒலிசெட்டா! நீர் இவ்வுலகிலேயே சிறந்த அதிர்ஷ்டசாலி. தேவதூதனாகிய கேப்ரியேல் உம்மைக் காதலிக்கிறார். உம்மிடம் வரப் பிரியப்பட்டும் நீர் பயந்து கொள்வீரென்று நினைத்தே வரவில்லையாம். இனிமேல் நீர் இஷ்டப்பட்டால் இராக்காலங்களில் வருவதாய்ச் சொன்னால் தேவர்கள் சூக்ஷ்ம திரேகம் படைத்தவர்களாதலால் உம்மிடம் வரு

வதானால் அவர் மானிட உருவத்தையே மேற்கொள்ளவேண்டும். நீர் எவ்வுருவத்தை விரும்புகிறீரோ அவ்வுருவத்தில் அவர் உம்மையடைந்து திருப்திப் படுத்துவதாய்ச் சொன்னார். இந்த விஷயத்தில் எனக்கும் ஒரு உபகாரம் செய்யவேண்டும். நீர் தேவதூதனை என்னுடைய உருவத்தை மேற்கொள்ளும்படி சொன்னால் அவர் உம்மிடம் இருக்கும் நேரமெல்லாம் என்னுடைய ஆத்மா தேவலோகத்திலிருந்து சாந்தியடையும். நான் பட்ட உதைக்கு நீர் இதையாவது செய்யவேண்டும்." என்று கேட்டுக்கொண்டான். இதையெல்லாம் உண்மையென்றே நம்பிய அப்பெண் அதிக சந்தோஷத்துடன் அதற்கு இணங்கி கேப்ரியல் தேவதூதனை அன்றிரவே வரும்படி சொல்லியனுப்பி விட்டாள்; இரவானதும் கேப்ரியலின் வரவை எதிர்நோக்கி அதிக ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தாள்.

அச்சந்நியாசியும் திருப்தியாகச் சாப்பிட்டபின் சிநேகிதன் ஒருவனை அழைத்துக் கொண்டு தனக்கு இணக்கமான வேறொரு ஸ்திரீயின் வீட்டிற்குச் சென்றான். அங்கே மாறுவேடமணிந்து கொண்டு தன்னுடைய நண்பனை அங்கேயே யிருத்தி லிசெட்டாவின் வீட்டிற்குச் சென்றான். லிசெட்டாவின் படுக்கையறை மேல் மாடியிலிருந்தது. தன்னுடன் கொண்டு போயிருந்த வெள்ளையாடைகளை தேவதூதனைப்போல் அணிந்துகொண்டு அவ்வறைக்குள் சென்றான். இவ்வுருவத்தைக் கண்டவுடன் அவள் அதிக பக்தியோடு முழங்கால் படியிட்டு வணங்கினாள். அவன் அவளை ஆசீர்வதித்து எழுந்திருக்கச் செய்து படுக்கைக்கு அழைத்துச்சென்றான். ஆல்பெர்டோ அழகும் இளமையும் பொருந்திய திடசரீரி; லிசெட்டா மென்மையான உடல் படைத்த இளநங்கை. எனவே அவன் இறக்கைகளின் உதவியின்றியே பலதடவை பறந்து அவளுக்குக் களிப்பூட்டினான்; இடையிடையே தேவலோகத்தின் சிறப்பையும் கூறினான். இவ்விதமாக இரவு கழிந்ததும் அவன் தன்னுடைய ஆடைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு மடத்தையடைந்தான்.

லிசெட்டா சாப்பிட்டு விட்டுத்தன்னுடைய தோழியை யழைத்துக்கொண்டு மடத்திற்குச் சென்று அல்பெர்டோ சந்நியாசியுடன்முந்நாளிரவு நடந்ததையெல்லாம் விரிவாகக்கூறினாள். அதற்கு அச்சந்நியாசி "அம்மா! நீர் என்னை கண்டீரென்பது எனக்குஒன்றும்தெரியாது. ஆனால் கேப்ரியல் தேவன் என்னிடம் வந்து, நான் சங்கதி 'யெல்லாம் சொல்லி-யானதும் எனக்கு ஒரு விதமயக்கம் வந்தது. மயக்கம் தீர்ந்து விழித்த போது எனது ஆத்மா ஒரு அழகிய பூந்தோட்டத்திலிருந்தது. அங்கு ரோஜாக்களும் இன்னும் மற்ற மலர்களும் ஏராளமாய்ப்பூத்திருந்தன. நான் விடியும் வரை அங்கேயிருந்து சொல்லொணாவின் பத்தை அநுபவித்தேன். என்னுடைய உடல் எங்கேயிருந்த தென்பது எனக்குத்தெரியாது" என்று சொன்னான். அதற்கு அப்பெண் "உம்முடைய உடல் இங்கே யிருந்தது என்று நான் சொல்ல வில்லையா? கேப்ரியேல் உமது சரீரத்தை மேற் கொண்டதால் அது இரவு முழுதும் என்னுடைய ஆலிங்கனத்திலேயே யிருந்தது' உமக்குச்சந்தேகமாயிருந்தால் உமது மார்பின் இடது பக்கத்தில் பாருங்கள். நான் ஆத்திரத்துடன் முத்தமிட்டதின் அடையாளம் இன்னும் தெரியும். அது மறைந்திருக்காது என்று சொன்னாள். இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்த பின்லிசெட்டாவீட்டிற்குச்சென்றாள்.

ஆல்பெர்டோ சந்நியாசி கேப்ரியேல் தேவதூதனுடைய வேடத்தோடு அடிக்கடி லிசெட்டாவின் வீட்டிற்குச் சென்று காலங்கழித்து வந்தான். ஒரு நாள் லிசெட்டாவிற்கும் மற்றொரு பெண்ணுக்கும் பெண்களின் அழகைப்பற்றிய விவாதம் நடந்தது. அப்பொழுது லிசெட்டா தன்னுடைய அழகைச்சிறப்பித்துக் கூற எண்ணி தன்னுடைய அழகு தேவர்களையும் மயக்கக்கூடிய தென்றும், தன்னுடைய அழகில் ஈடுபட்ட கேப்ரியல் தேவதூதன் இராக்காலங்களில் அடிக்கடி தன்னிடம் வருவதாயும் அச்சமயங்களில் அத்தேவதூதன் தன்னுடைய கணவனை விட அதிக அன்புடன் நடந்து கொள்ளுவதாயும் பெருமை பேசிக் கொண்டாள். அப்பெண் தன் வீட்டிற்குச் சென்று இன்னும் சிலரிடத்தில் இதைச் சொல்ல எல்லோரும் லிசெட்டாவைப்பரிகாசம் செய்து கொண்டு நகைத்தனர். இச்சங்கதி இவ்வாறே ஊரெல்லாம் பரவி லிசெட்டாவின் மைத்துனன் மார்களுக்கும் தெரிந்தது.

ஒரு நாள் ஆல்பெர்டோ வழக்கப்படி லிசெட்டாவின் வீட்டிற்குச் சென்றான். அவன் படுக்கையறைக் குள்ளே சென்றதும் அவளுடைய உறவினர் கதவருகே வந்து நின்று கொண்டனர். அவன் இதை யறிந்ததும் ஜன்னலைத் திறந்து கீழே ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் குதித்து விட்டான். அவன் நன்றாய்நீந்தக்கூடியவன், தண்ணீரும் அதிகம் இருந்தது. ஆதலால் யாதொருகெடுதியு மின்றி நீந்திச் சென்று அக்கரையிலிருந்த ஒரு குடிசையை யடைந்தான். அங்கிருந்த குடியானவனிடம் அவன் ஏதோ பொய்யெல்லாம் சொல்ல அவனும் நம்பி அவனுக்கு உணவளித்தான். திரும்புமளவும் அங்கேயே படுத்திருக்கும் படி அவனுக்குச்சொல்லி குடிசையைப் பூட்டிக்கொண்டு தன் வேலைக்குச்சென்றான்.

மறுநாள் காலை ஊராரெல்லாம் கேப்ரியேல் தேவதூதன் இரவு லிசெட்டாவின் அறையில் இருந்ததாயும் அவளுடைய மைத்துனன்மார் பார்த்துக்கொண்டதால் இறக்கைகளை அங்கேயே விட்டுவிட்டு வாய்க்காலில் குதித்து ஓடிவிட்டதாயும் பேசிக்கொண்டனர். இதையெல்லாம் கேட்ட அக்குடியானவன் தன்னுடைய குடிசையிலிருப்பவன் அந்த ஆசாமியாய்த்தான் இருக்க வேண்டுமென்று தெரிந்து கொண்டான். பிறகு அவன் குடிசைக்குச் சென்று அவனைக் காட்டிக்கொடுப்பதாய் பயமுறுத்த அவன் குடியானவனுக்குஐந்நூறு ரூபாய் கொடுப்பதாயும் தன்னைக்காப்பாற்ற வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான். குடியானவனும் அவ்வாறே ஒப்புக்கொள்ள அவன் தன் நண்பர்களுக்குச் சொல்லியனுப்பிப் பணத்தைப் பெற்று குடியானவனுக்குக் கொடுத்தான். பிறகு அக்குடியானவன் அன்று ஓர் நோன்பு நாளென்றும் அதற்காக எல்லோரும் பல வேஷங்களைப் போட்டுக்கொண்டு அவ்வூர் மைதானத்தில் கூடுவார்களென்றும் அச்சந்நியாசி ஓர் கரடியாயும் தான் கரடிக்காரனாயும் சென்றால் தப்பித்துப்போய் விடலாமென்றும்யோசனை சொன்னான். அதற்கு அல்பெர்டோவும் இணங்க, அவனுக்கு உடம்பெல்லாம் தேனும் பசையும் தடவி மயிரை ஒட்டி முகமூடியும் ஒன்று போட்டான்; கழுத்தில் ஒரு சங்கிலி கட்டி தான் பிடித்துக்கொண்டு கையில் ஒரு தடியும் எடுத்துக்கொண்டான். தனக்கு முன்னாலேயே ஒரு ஆளை, தான் கேப்ரியேல் தேவதூதனை சங்கிலியில் கட்டிக்கொண்டுவருவதாய் அவ்வூராரிடம் சொல்லும்படி அனுப்பிவிட்டான். பிறகு அவனும் கரடியை நடத்திக்கொண்டு அவ்வூரை நோக்கிப் புறப்பட்டான்.

ஜனங்களெல்லோரும் அதிசயத்துடன் கரடியையும் கரடிக்காரனையும் பின் தொடர்ந்தனர். மைதானத்திலும் கூட்டம் கூடிற்று கரடிக்காரன் வேடிக்கையாரம்பிக்கும் வரையில் கரடியை ஓர் கம்பத்தில் கட்டி வைத்தான். ஜனங்களெல்லோரும் வந்து சேர்ந்த பின் அவன் கரடியை அவிழ்த்து விட்டு "ஜனங்களே! இன்று நமக்கு வேறு வேடிக்கை ஒன்றும் இல்லாததால், தேவலோகத்திலிருந்து இங்கே ஒவ்வொரு இரவும் வந்து வெனிஸ் நகரப் பெண்களைக்களிப்பூட்டும் கேப்ரியல் தேவதூதனை உங்களுக்குக் காட்டும் பொருட்டுக் கூட்டி வந்திருக்கிறேன்" என்று சொன்னான். முகமூடியைக் கழற்றியவுடன் ஆல்பெர்டோ சந்நியாசியைப்பார்த்து எல்லோரும் கோபத்துடன் ஆரவாரித்தனர்: கற்களாலும் சாணியுருண்டைகளாலும் அடித்துத்துன்புறுத்தினர். இச்சங்கதி மடத்திற்கு எட்டியபின் அங்கிருந்த சந்நியாசிகளில் சிலர் மைதானத்துக்குச் சென்று அவனை மடத்திற்கு அழைத்துச்சென்று சிறையிலிட்டனர். அவன் தன் ஆயுளை சிறையிலேயே கழித்தான்.


மலையாளம் சில்க்.

2½-வீதி. 5-நீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-நீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.



கோடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கோள்ள மன்னார்குடி

# யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.



## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

## "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.



## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத்
தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவறாதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

(3) இதற்குப் பின்தான் அடுப்பு மறைந்ததாம்! சாமான்கள் பறந்தனவாம்!! பல பண்டங்கள் வெளியில் வந்து கிடந்தனவாம்!!!

(4) தனது தாயார் உபயோகித்த அடுப்பு மாயமாகக் காணமற்போய் மாலையில் வந்து கிடந்ததாம்.

(5) போலீசார் விசாரித்துத் தங்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை என்று சொன்னார்களாம்.

(6) பிரம்ம ஞான கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரிடம் தான் கண்ட தோற்றங்களைக் கூறவும், அவர் மறு உலகத்திலிருந்தே ஒரு "ஆவி" செய்யும் காரியங்கள் என்றாராம்!

(7) இதன் பிறகு, மச்சுமேலிருந்து சில கடிதங்கள் அந்தச் சிறுகுழந்தை ஆவியிடமிருந்து வந்தனவாம்.

(8) விஸில் செய்யும் பொம்மை ஒன்றை தாஸ்குப்தா அந்தச்சிறு குழந்தைஆவிக்குப்பரிசுஅளித்ததும், அந்தப் பொம்மை மேல்கிளம்பி, விஸில் (Whistle) சப்தமும் கேட்டதாம்.

(9) அந்த ஆவி மூலமாக, தனக்குத் தெரியாத எதிர்கால விஷயங்கள் தெரியவந்தனவாம்.

இந்த அற்புத விஷயங்கள், உண்மைதானென்று, துளசி தாசரும், பிரின்ஸிபால் யோகேந்திரநாத் மித்திராவும், இன்னும் ஒருவரும், தாஸ் குப்தா சொல்லிய விஷயங்கள், தெரிவித்தனர்களாம்.

இம்மாதிரி கல்கத்தாவில் தாஸ் குப்தா பிரசங்கம் செய்ததாக "தமிழரசு" கூறுகிற இந்தச் சம்பவங்கள், தாஸ் குப்தா பிரசங்கத்தை நேரில் கேட்டவர்களுடைய வாக்கியமல்ல. அவர் வங்காள பாஷையில் பேசினதை, ஆங்கில பேப்பரில் போட்டிருக்க வேண்டும். அதிலிருந்து "தமிழரசு" தர்ஜுமா செய்து, தனது ஏடுகளில் வரைந்திருக்க வேண்டும். தாஸ் குப்தா செய்த பிரசங்கம், 3, 4 கைமாறி வந்திருக்க வேண்டும். இந்தக் கைமாறுதல்களில் அந்த வாக்கியத்தில் எவ்வளவு அதிகப்படுத்தியும், குறைவு படுத்தியும் நமக்கு வந்திருக்கிறதோ அது தெரியாது. இந்தக் கேள்வி மொழியை, கோர்ட்டுகளில் பொருள் படுத்தமாட்டார்கள். இது நமது முதல் ஆட்சேபனை.

இரண்டாவது, உலகில் கோடிக் கணக்கான குழந்தைகள் அன்றாடம் இறக்கின்றன. இந்தக் குழந்தைகளில் ஒன்று இரண்டு தானா மறுஉலகத்திலிருந்து திரும்பி இத்தியாதி குறும்புகளைச் செய்ய வேண்டும்?

மூன்றாவது அன்றாடம் சுடலையிலிருந்து வெளிப்படும் கோடானு கோடி ஆவிகளில், ஒன்று இரண்டு ஆவிகளுக்குத்தானா, தங்கள் பெற்றோர் பேரில் அன்புஉண்டாக வேண்டும்?

நான்காவது, எந்த வித காரியங்களால் தங்கள் அன்பைக்காட்டுவது? அடுப்பை ஒளித்து வைப்பதும், பொம்மையை மேல்தூக்கிச்செல்லுவதும், பாய் தலை அணை, அகப்பை, கரண்டி, அரிவாள்மணை, கத்தி, உலக்கை, உரல் முதலிய அற்பசாமான்களை வீசி எறிவதுமா, அந்த ஆவிகளுக்கு விசேட வேலை? உயிர் வாழும்போது இம்மாதிரியான செயல்களை, அதே குழந்தைசெய்து வருமாயின் அதனைப் பயித்தியம் பிடித்த பிள்ளை என்றாகிலும், பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கன்றோ அனுப்புவார்கள்? அல்லது துஷ்டப்பிள்ளை என்றல்லவோ, அதனைத் தண்டிப்பார்கள்? இறந்த பிறகுதானா, பஞ்ச அறிவோடு வாழ்ந்த குழந்தை, பயித்தியம் பிடித்த வரைப் போல் நடிக்க வேண்டும்? இந்தப்பயித்தியக் காரச்செயல்களை, தாஸ்குப்தா குழந்தைமாத்திரம் செய்ததாகக் கதைகள் கட்டுவதல்ல, இத்தியாதி கட்டுக் கதைகளைச் சொல்லுகின்றவர்கள் ஒவ்வொருவரும், இதே அற்ப, அசங்கிய காரியங்களையே விண்ணுலக வாசிகள் செய்வதாக வெட்கமில்லாமல் வரைகின்றனர்! Sir. Oliver குமாரன் Reymond இதே அற்ப சொற்ப காரியங்களைச் செய்து வருவதாகவும், அவர் தகப்பனார் எழுதுகின்றார். ஒரு வேளை பஞ்ச அறிவுடையோர், நமது உலகை விட்டமாத்திரத்தில் உன்மத்தர்களாக விண்ணுலகில் மாறி விடுகின்றார்கள் போலும்! கரியையும், சாம்பலையும், மலஜலபாதையையும்சில இறந்தோர் ஆவிகள் (Spirits) வீட்டில் எறிகின்றனவாம்!! வாழ்க்கையில் இந்த அசுத்தங்களைத் தொட அசங்கியமடையும் மக்கள், இறந்த உடனே, இத்தியாதி அசங்கியங்களைச் செய்யத் துணிந்தால், இந்த ஆவிகள், வானுலகத்தில் பயித்தியங்கொண்டு உலாவுகின்றன போலும்!

ஐந்தாவது, தனது குழந்தையின் ஆவி, தங்கள் கண்களுக்குத் தெரியவில்லையாம்! சிறு குழந்தைகளுக்கு மாத்திரம் தென்பட்டதாம். ஐந்து கண்ணனென்று சொன்ன மாத்திரத்தில், அழும் குழந்தைகள், இறந்த குழந்தையின்ஆவியைப்பார்த்ததாகச் சொன்னால், அதை யார் தான் நம்புவார்கள்? அந்தக் குழந்தை கண்களுக்குத் தோன்றும் உருவம், உண்மையானால், தாஸ் குப்தாவுக்கும் மற்ற யாருக்கும் தோன்றாமற் போவானேன்? இது வொன்றினாலேயே, குழந்தைகள் சொல்வது பொய்யென்று ஏற்படுகின்றது.

ஆறாவது. குழந்தைகளிடம் விளையாடிய உருவம், போலீஸ்காரர் விசாரணையில் எந்தக் காரியமும் செய்ததாகத் தெரியவில்லை. அதன் துஷ்டத்தனங்கள், போலீஸ் முன்னிலையில் நடக்கவில்லையென்று தெரிகிறது. நாஸ்திகர் முன்னே, இந்தத் தோற்றங்களுக்கு மிகுந்த பயம் போலும்!

ஏழாவது, மனிதனுக்குத் தான், தனியாக ஒருஆவி இருக்கிறதென்றும், இதனை சூட்சுமதிரேகமென்றும்மதஸ்தர் கூறுவர். இறந்த பிறகு, இந்தச் சூட்சும திரேகம் வெளிப்பட்டு, ஆவி மயமாக உலகில் உலாவும் என்பது, ஆவிவாதிகளின் (Spiritualists) வாதமாகும். ஆனால், எந்த ஆவி வாதியும், உடுக்கும் ஆடை, ஆபரணம், முதலியவைகளுக்குச் சூட்சும திரேகம் உள்ளதாகச் சொல்வதை அறியோம். ஆனால், தாஸ் குப்தா சொல்லுங் கதையில், தனது குழந்தையின் ஆவி, ஆடை ஆபரணங்களுடன் விளையாடியதாகத் தெரிகிறது. இந்த ஆடை யாபரணங்கள் உண்மையானவைகளா? அல்லது, ஆவி ஆடை யாபரணங்களா? என்பது தான் தெரியவில்லை? இத்தியாதி கட்டுக் கதையில் டொப்பி, பூட்ஸ், கால் சட்டை மேல்சோடு ஷர்ட், வேஷ்டி, பாதரட்சை,குடை, தடியுடன் இறந்தவர் ஆவி, உலாவுகின்றதாம்! இவைகளுக்கும் சூட்சும திரேகங்களுண்டோ? என்று கேட்கின்றோம்.

சொல்வார் சொன்னால், கேட்போருக்கு மதி எங்கே போயிற்றென்பார்கள். மதியை ஒரு பக்கம் கட்டி வைத்துவிட்டு, மதங்களில் நம்பிக்கை வைத்தவர்கள் தான், இந்தக் கட்டுக்கதைகளைச் சிறு பிள்ளைத்தனமாக நம்பி மோசம் போகின்றனர்.

எட்டாவது. திவான்பகதூர்களும் ராவ் சாயபுகளும், மகாத்மாக்களும் எவ்வளவு எளிதில் தத்தம் மூட மத பழக்க ஒழுக்கங்களால், ஏமாந்து போகின்றார்களெனத் தெரிந்துகொள்ள வேண்டில்அடையாரில்பிரமஞானகட்டிடத்தில் (Theosopical Society Head Quarters at Adyar) நடந்த மோசங்களை ஒரு காலத்தில் உண்மையென நம்பி வந்த ஜட்ஜுகள் எத்தனை பேர் பிரபல லாயர்கள் எத்தனை பேர் பெரிய உத்தியோகஸ்தர்கள் எத்தனைபேர் அங்கே நடந்துவந்த மோசவித்தைகளை நம்பி மோசம் போனவர்கள் எத்தனை பேர்? அங்கே ஆயிரம் மையில் தூரத்திலிருந்து கண்ணிமைப் பொழுதில் கடிதங்கள் வந்து விழுந்தன! மணியை யாரும் அடிக்காமலே, மணி ஓசை கேட்டது! மேல் மாடியிலிருந்து கனத்த தளத்தினுள் புகுந்து சீட்டுகள் வந்தன? சில பிரம்ம ஞானத் தலைவர்கள்சூரியனிலும் சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் யாத்திரை செய்தனராம்! போட்டோகாம்ரா இல்லாமலே, மகாத்மாக்களின் உருவங்கள் போட்டோவில் காணப்பட்டதாம்! இன்னும் அநந்த வித அபூர்வ தோற்றங்கள் நிகழ்ந்தனவாம்! இந்தத் தோற்றங்களின் பிரக்கியாதி உலகமெங்கும் பரவியது. உலக முழுமையிலிருந்து அங்கத்தினர் திரள் திரளாகக் குவிந்தனர். "விஞ்ஞானிகளே! இந்தச் சம்பவங்களுக்கு உங்களுடைய வியாக்யானம் என்ன" என்று மதஸ்தர்கள் எழ்மை செய்யத் தலைப்பட்டனர்! ஆனால், உண்மை ஒரு காலத்தில் வெளிப்படும். இந்தத் தோற்றங்கள் நிகழ்ந்த இரண்டொரு வருஷங்களுக்குள், அந்த மாயச்சூதை காட்டிவந்த குலூம்ப்ஸ் (Coulombs) என்பார், தங்களுக்குள் தாங்கள் செய்து வந்த இந்த மோசங்களைச் சகியாது, நடந்த மோசங்களை உள்ளதை உள்ளபடியே வெளியிட்டனர். அன்று முதல், பிரம ஞான மாயத் திருவிளையாடல்கள் எல்லாம், நின்று விட்டன.

"தமிழரசு"வில் கண்டுள்ள தாஸ் குப்தா கதை புதியதல்ல. கற்பகாலங்களாக, காட்டுமனிதன் முதல், தற்கால நாகரீக மனிதன் வரை விசாரிக்காமலே நம்பி வரும் கதைகளாகும். ஒரு காலத்தில், உலக முழுமையுமே, இதைப்போன்ற கதைகள் வழங்கி வந்தன. விசாரணை மேலிட, மேலிட ஸையன்ஸ் அதாவது, விஞ்ஞானம் பரவப் பரவ இந்தக் கதைகள் குறைந்தே வருகின்றன. நாம் அடுத்தடுத்துக் கூறி வந்ததை, மறுமுறையும் கூறுகின்றோம். நம்பவேண்டுமானால், எதையும் நம்பலாம். ஆனால், பகுத்தறிவைத் தயை தாட்சண்யமின்றி உபயோகிக்கின்றவர்களுக்குச் சஞ்சலம் நேரிட வேண்டிய அவசியமில்லை. மூட மத பழக்க வொழுக்க நம்பிக்கைகளுக்குக் கோடாலியாய் இருக்கும் கருவி ஒன்றே. அதாவது, விஞ்ஞான முறையொன்றே. இம்முறையை ஒவ்வொரு விவேகியும் கையாள வேண்டும்.

---

# ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

---

# புதிய பத்திரிகை.

"சிறுவர் அறிவுக்கதிர்"
சீக்கிரம் வெளிவரும்.

பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு எல்லா வகைகளிலும் அறிவு புகட்டும் புதுமாதிரியான ஓர் மாதாந்தரப்பத்திரிகை.

வருஷ சந்தா உள்ளூர் 8 அணா.
" வெளியூர் 10 அணா.
தனிப்பிரதி 9 பை.

உடனே சந்தாதாராகுங்கள்
K. J. வேதமுத்து,
தமிழ்ப்பண்டிதர், L. M. போதனாமுறைப்பாடசாலை ஈரோடு.

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணா 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### நான் நாஸ்திகன் ஏன்?

(பகத்சிங் எழுதியது.)

இப் புத்தகமானது தோழர் பகத்சிங், அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானார் என்பதுபற்றியும், ஏன் நாஸ்திகரானார் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும்.

விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.